624

[illegible] M. 1803. Vol. 1—No. 10.

2 JUL 1924

லக்ஷ்மி



சொந்தக்காரர்கள்:

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

சுகிர்தாஞ்சனம்

சரீரத்தில் உண்டாகும்
கீழ்க்குறித்த வியாதிகளை வெகு
சீக்கிரத்தில் ஆச்சரியமாய்
முற்றிலும் குணமடையச்
செய்யும்.

தலைவலி
வாதரோகம்
கீல்வாய்வு
களுக்கு
காயப்புண்
இடுப்புவலி
சுவாசகாசம்
ஒற்றைதலை
நோய்

தமனீய
காசம்
பல்வலி
வீக்கம்
இருமல்
விஷகடி
வெட்டுக்
காயம்
முதலியன.

விலை அணா 7

விற்குமிடங்கள் :—பம்பாய், கல்கத்தா, சென்னை.

ஏஜன்ஸி விஷயங்கட்கும், மொத்த விலைகட்கும் எழுத வேண்டிய விலாசம் :—

சுகிர்தாஞ்சனம் டிபோ,
3-187, மவுண்டு ரோட்,
சென்னை.



ஸ்ரீமாந் பி. அய்யண்ண செட்டியார்.



காலஞ்சென்ற திவான்பகதூர் பெத்தாச்சி செட்டியார்.

28 JUL 1924

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க. | ரக்தாட்சி௵ வைகாசி௴ 1924 மே | இதழ் ௰

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	467
2.	கடல்	468
3.	தமிழகத்தாருக்கு II	469
4.	யக்ஞம்	476
5.	நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத் துக்குச் சண்டையும்	483
6.	ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	487
7.	நங்கையின் நிருபம்	491
8.	இந்தியத் தாய் தன் மக்கட்கு உரைப்பது ...	496
9.	சப்பாத்துக் கள்ளி அல்லது நாகதாளியின் சில உபயோகங்கள்	499
10.	ஜெர்மானியர்க்குள் வழங்கும் ஒரு பழங் கதை	503
11.	பார்சிகளும் அவர்களது மதமும ...	505
12.	இந்தியாவின் ஜனசங்கியை	507
13.	பெத்தாச்சி வள்ளல்	509
14.	முரசொலி	510
15.	மதிப்புரை	515
16.	விசேஷக் குறிப்புகள்	516

சித்திரப் படங்கள்.

1. ஸ்ரீமாந் பி. அய்யண்ணச் செட்டியார்.
2. காலஞ்சென்ற திவான் பகதூர் பெத்தாச்சி செட்டியார்.
3. கனந்தங்கிய ஆர். கே. சண்முகம் செட்டியார், எம். எல். ஏ.

210338
600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள்நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 2.
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2-8.
உயர்ந்த பதிப்பு (Art Paper) ...	...	ரூ. 10

தனிப்பிரதி 4 அணா.

விளம்பரம்

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 20. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக்கொள்ளவும்.

சந்தாதாரர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும்.

பிரதி இங்கிலீஷ் மாதம் மூன்றவது வார முடிவில் நமது சஞ்சிகை வெளிவரும். மானேஜர்.

இலங்கை நேயர்களுக்கு!

நமது 'லக்ஷ்மி'க்கு சந்தாதார்களைச் சேர்க்கும் பொருட்டு நமது ஏஜன்று ஸ்ரீமான் **A. M. G.** நாயுடுவை இலங்கைக்கு அனுப்பி யிருப்பதால், நமது சந்தாநேயர்கள் அவருக்கு வேண்டிய உதவி செய்வதோடு புதியசந்தாதாரர்களை சேர்த்து கொடுக்கவும் வேண்டுகிறோம். அவர் தற்சமயம் கொழும்பில் இருக்கிறார். யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு 2 வாரத்தில் போவார்.

ஒரு விண்ணப்பம்.

நமது விளம்பரக்காரர்களுக்கு எழுதும்போது நமது சந்தா நேயாகள் தயவுசெய்து 'லக்ஷமி'யின் பெயரைக் குறிப்பிட்டு எழுதவும்.

மானேஜர், "லக்ஷ்மி."

28 JUL 1924

ஓம்

லக்ஷ்மி துதி

பதங்கள் எல்லாமும் பிறப்போ
டிறப்பில் பரத்துவமும்
இதங்கள் மற்றியாவும் நன்காராயில்
வேறில்லை எட்டெழுத்தால்
நிதம் களிகூர் பெருமான் நெஞ்சில்
மேவி நிருதர் தம்மேல்
கதங்களும் செய்யும் பெருந்தேவி
யார் திருக்கண் அருளே.

32
1/1 N23 LA
A124·1·10

கடல்

ஸ்ரீமாந் தேசிக விநாயகம் பிள்ளை யவர்கள் எழுதியது.

(கற்களும் பாறைகளும் அடர்ந்த கடற்கரையில், கடல் கொந்தளிப்பாயிருந்த தருணத்தில், மணலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை கடலை நோக்கிக் கூறியது.)

எல்லை அறியாப் பெரும் கடலே! நீதான்
இரவும் உறங்காயோ? கடலே!
அல்லும் பகலும் அலைகடலே! உனக்
களுப்பும் இல்லையோ? கரும் கடலே! (1)

உருண்டு திரண்டு வரும் கடலே! உடைந்
தோடிப் போவ தேன்? கடலே!
வெருண்டு மதிகெட்டாய் கடலே! பாறை
விலகிப் போகுமோ? கடலே! (2)

பொங்கு திரைகளோ? கடலே! அவை
புரவி நிரை தாமோ? கடலே!
எங்கும் உனதொலியோ? கடலே! அன்றி
இடியின் முழக்கமோ? கடலே! (3)

ஓடம் எடுத்தெறியும் கடலே! தயை
உனக்குச் சற்றில்லையோ? கடலே
ஆடல் வீடு தனைக் கடலே! நீயும்
அழிப்ப தழகாமோ? கடலே! (4)

மலையை வயிற்றடக்கும் கடலே! எண்ணில்
மகர மீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக்கும் கடலே! சிப்பி
விளையாடற் குதவும் கடலே! (5)

மழைக்கு மூலமும் நீ கடலே! அதை
வாங்கிவைப்பதும் நீ கடலே!
வழங்கும் மகிமையெலாம் கடலே! எவர்
வழுத்தி முடிக்க வலார்? கடலே! (6)

தமிழகத்தாருக்கு

ஸ்ரீமாந் பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

II

கல்வி.

கல்வி என்னும் சொல் செவிப் புகுந்த அளவிலே தமிழர் மனதில் நாலடியார், குறள், அகநானூறு, புறநானூறு, பத்துப் பாட்டு, மணிமேகலை, சிலப்பதிகாரம், தொல்காப்பியம், ஆதியான இலக்கிய இலக்கணங்களின் பெயர்களே முனைந்து தோன்றும்.

தமிழிலக்கண இலக்கியங்களைக் குருமுகமாகப் பாடங் கேட்டு, நெட்டுருவேற்றி புத்தகங்களிலுள்ளவாறே 'போணகிராப்' யந்திரம் போன்று புறத்துத் தள்ளுவோரே கல்விமான்கள் என்பது தமிழகத்தார் கொள்கை. அத்துடன் யமகம் அந்தாதி பாடவும் சமர்த்துளரேல் அவர்களே பெரிய பண்டிதர்கள். இவற்றோடு தசாவதானமோ சதாவதானமோ செய்து விட்டால் அவர்களே கல்விக் களஞ்சியம். அவர்களுக்கு உலகத்திலே ஒருவருமே இணையாகார். அவர்களே கல்விக் கடலின் அக்கரை கண்டவர்கள்.

கல்வியைப் பற்றிய தமிழர் கருத்தின் கடந்த எல்லை இம்மட்டே.

உண்மையில் கல்வி இவை தாமோ? இல்லை! இல்லை!!

மனிதனிடத்து அநாதியாக அமைந்துள்ள ஸர்வ சக்திகளையும் பூரண விகாச மடையச் செய்வதே மெய்யான கல்வியாம்.

மேலே கூறியவை ஏட்டுக் கல்வி. மெய்க் கல்விக்குப் பிரபஞ்சமே சிறந்த ஏடு. நூல்களுள் கல்வி இல்லை. நூல்கள் ஆவனவெல்லாம் நல்லறிவாளரான நம் முன்னோர் வருந்தி யுழைத்துக் கண்டறிந்த உண்மைகளை ரேகைப்படுத்தி வைத்த பிரமாணங்களே.

கல்வி அல்லது அறிவு பிரபஞ்சத்திலேயே இருக்கின்றது. நூல்கள் கல்வி அல்லது அறிவைச் சம்பாதிப்பதற்கு அமைந்த துணைக் கருவிகளேயாம். ஆகவே மெய்யறிவடைய விரும்புவோர் நூல்களின் துணை கொண்டு பிரபஞ்சத்தையே உற்று நோக்குதல் வேண்டும்.

நாலடியார், குறள், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, அகத்தியம், வீரசோழியம், தொல்காப்பியம், ஆதிய இலக்கிய இலக்

கணங்களின் ஆசிரியர்கள், இலக்கிய இலக்கணச் சார்பாகத் தாம கண்ட உண்மைகளை அந்நூல்களிலே குறித்துவைத்துப் போந்த னர். பிற நூல்களும் அத்தகையனவே.

ஆகவே தமிழ் மொழியில் தற்கால முள்ள நூல்களோடு கல்வி அல்லது அறிவு முற்றுப் பெற்று விட்டதென எண்ணல் எவ்வாறு இயலும்?

தமிழகத்து இந்தத் தப்பெண்ணமே எங்ஙனமோ குடி கொண்டிருக்கின்றது.

செக்கைச் சுற்றிச் சுற்றி வரும் வாணியன்மாடுபோல் தமிழகத் தார் கருத்து பழைய இலக்கண இலக்கியங்களையே சதா சுற்றிச் சுற்றி உழலுகின்றது. தமிழரிடத்து புதுக் கருத்துகளையும் புது எண்ணங்களையும் காண்டல் மிக அரியதாய் விட்டது. எட்டி நோக்கும் சுதந்தர மனப்பாங்கு நம்மவரிடத்துச் சூனிய மாயிற்று.

"எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே."

என்னும் சூத்திரத்தை இலக்கண விஷயங்களுக்கு மட்டு மன்றி ஏனைய விஷயங்களுக்கும் ஆதாரமாகக் கொண்டு நம்மவர் புது நாட்டமற்றவர் ஆய்விட்டனர்.

இல்லறத்தைப் பற்றிய உபந்யாசங்கள் பலவற்றை நான் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன்; பல பிரசங்கங்களையும் கேட் டிருக்கிறேன். உபந்யாசகர்கள் எல்லாம் திருவள்ளுவர் இல்லற வியலில் கூறிய 24 அதிகாரங்களுக்கும் பொழிப்புரை கூறுகிறார் களே யன்றி தற்கால அநுபவ முறையை ஒருவரேனும் கவனிக்கின் றார்களில்லை. குடித்தனச்செட்டு, வரவு செலவுகளுக்குக் கணக்கு வைத்தல், வருவாய்க்குத்தக்கச் செலவு செய்தல், கடன் கொள்ளா மை முதலிய விஷயங்கள் இல்லறத்துக்கு எவ்வளவோ பொருத்த மானவைகளா யிருந்தும், நமது உபந்யாசகர்கள் திருஷ்டியில் இவை படத் தவறி விடுகின்றன.

கற்பைப் பற்றிப் பேசுவோர் பெண்கள் விஷயத்தை மட்டும் கவனிக்கின்றார்களே யன்றி புருஷரைப் புறக்கணித்தே விடுகின்ற னர். பெண்களெல்லாம் சீதைகளாகவும் சந்திரமதிகளாகவும் தமயந்திகளாகவும் இருக்கவேண்டும் என்று பிரசங்கம் செய்வோர் புருஷர்கள் எல்லாம் ராமர்களாகவும் அரிச்சந்திரர்களாகவும் நளராக வும் இருக்கவேண்டு மென்று கூறுவதைக் காணோம்.

தமிழுலகத்திலே சிறந்த பத்திரிகையாகக் கருதப்படும் ஒரு மாத ஸஞ்சிகையில் சில மாதங்களுக்குமுன் விவாகத்தைப்பற்றி ஒரு வித்வான் ஒரு உபந்யாசம் எழுதினார். அதை நான் ஆதியோ டந்தம் வாசித்துப் பார்த்தேன். நமது நூல்களில் கூறப்படும்

எட்டு வகைக் கலியாணங்களின் பழங் கதையும் அம்மி மிதித்தல் அருந்ததி காணல் ஆதியான சடங்குகளின் உட்பொருளும் தாலியின் வரலாறும் தவிர அவ்வுபந்யாசத்தில் வேறெதையும் நான் காண வில்லை.

எட்டுவகை ஏட்டுக்கலியாணங்களும் காலஹரண விதிக்கிரை யாகி எடுபட்டுப் போய்விட்டன வென்பதை யார்தான் அறியார்கள். அநுபவமுறையிலே விவாகத்தைப் பற்றி உபந்யாசம் செய்ய முன் வருவோர், விவாகந்தான் யாவருக்கும் அவசியமோ என்பதை முதன் முதல் கவனிக்க வேண்டும். பின்னர் விவாகத்துக்கேற்ற வயது, மணமக்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, வரதக்ஷிணை, விவாகச்செலவு ஆதிய பல விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து ஒரு முடிபு கூறவும் வேண்டும். என்றால் மட்டுமே தற்கால நிலைமைக்கு, விவாகத்தைப் பற்றிய உபந்யாசம பூர்த்தியாகும்.

நமது கல்விமான்கள் ஏட்டுலகத்திலேயே வாழ்ந்து வருவதால் தாம் எடுத்துக்கொண்ட பிரசங்கத்தை முன்னோர் கூறிய நூல் முறைப்படி கூறி முடித்து விடுகின்றனர்.

நாம் வாழ்வது 1924-வது வருஷமென்றும், இக்காலத்துக் குரிய விஷயத்தைப் பற்றிப் பேசும்போது ஐந்நூறு ஆயிரம் வருஷங்களுக்குமுன் எழுதப்பெற்ற நூல்களை மட்டும் முழுதும் ஆதாரமாகக் கொள்வது பொருந்தாதென்றும் அன்னோர் எண்ணு கின்றாரில்லை.

தமிழகத்திலே இப்பொழுது ஊர்கள் தோறும் கழகங்கள் ஏராளமாய் நிலைபெற்றிருக்கின்றன. ஆண்டுதோறும் அக்கழகங் களில் ஆண்டு நிறைவு விழாக்களும் கொண்டாடப் படுகின்றன. அவ்விழாக்காலங்களில் கல்விமான்களால் பற்பல சொற்பொழிவு களும் நிகழ்த்தப் படுகின்றன. சொற்பொழிவுகளெல்லாம் அன்பு, அறம், அருள், ஈகை, மக்கட்பேறு, பரோபகாரம் ஆதிய பதிவு விஷயங்களே. தமிழர்கள் முன்பார்வை யுடையவர்கள் என்பதைக் காட்டத்தக்க விஷயங்களைப் பற்றி உபந்யாசங்களை தமிழகக் கழகங் களிலே கேட்டல் மிக அருமை.

பிரசங்கவிஷயம் இவ்வாறாக வாதவிஷயங்களைக் கவனிப்போம்.

(1) விதி பெரிதா மதி பெரிதா?

(2) கடவுளுக்கு உயிருண்டா இல்லையா?

(3) வள்ளுவர் சைவரா சமணரா?

(4) அகத்தியர் தமிழரா ஆரியரா?

(5) சீரியன் யார்? ராமனா ராவணனா?

(6) வேதம் அருளியது பிரமனா சிவனா?

(7) வேத பாஷை தமிழா ஸம்ஸ்கிருதமா?

(8) திருநான்மறை இருக், யசுர் ஆதியனவா? பிறவா?

(9) வேதம் வெளியான இடம் இமயமா பொதியமா?

இவைகளே தமிழகத் தறிவாளிகளின் வாத விஷயங்கள்.

தமிழகத்தாரின் பிரசங்க விஷயங்களையும் வாத விஷயங்களையும் பார்த்தவுடனேயே நம்மவர்களின் முயற்சி எவ்வழிச் செல்லுகின்ற தென்றும் எவ்வளவு பயனுடைய தென்றும் உண்மைப் பற்றுடையோருக்கு எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்.

வெறும் தமிழ்ப்பண்டிதர்கள் இவ்வழி யுழைத்துக் காலம் போக்கினால் நான் குறை கூற முன் வரமாட்டேன். ஏனெனில் அவர்களிடத்து அம்மட்டே நமக்கு எதிர்ப்பார்க்க முடியும். உப்புக் கடையில் சீனி யகப்படுமா?

ஆனால் உயர்தரக் கலாசாலைப் பட்டம்பெற்ற ஆங்கிலப் படிப்பாளிகளே இவ்வழி யுழைத்து வீண்காலம் போக்கல் எனக்குப் பெரும் வியப்பையே தருகின்றது.

பழமையிலும் இலக்கண நுண்மையினும் இலக்கிய விரிவிலும் ஏனைய சிறப்புக்களிலும் மற்றக் கண்டங்களிலுள்ள எப்பாஷைக்கும் தமிழ்மொழி சிறிதும் தலைகவிழ்க்கும் தன்மையதன்று என்பது உண்மையேயெனினும், தற்காலத்து, உயர் மொழியாகக் கருதப்படும் ஆங்கிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் நமது தமிழிலக்கியம் எத்துணை அற்பமானதென்று நமது ஆங்கிலப் படிப்பாளிகள் அறியார்களா?

தமிழ்பாஷையில் இந்நிமிஷம்வரை வெளிவந்துள்ள நூல்களிலெல்லாம் ஒவ்வொரு பிரதி வாங்கவேண்டுமானால் ஆயிரம் ரூபாவுக்குமேல் வேண்டுமோ என்பது சந்தேகமே. பண்டித மதிலால் நேருவின் சட்டப்புத்தக விற்பனையைப்பற்றி சிலதினங்களுக்கு முன் சென்னை சுயராஜ்யா பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளிவந்தது. பண்டிதரவர்கள் சட்ட நூல் நிலயத்தின் ஒரு சிறு பகுதியான லா ரிப்போர்ட்டுகளுக்கு மட்டும் விலை 2500 ரூபாவாம். இவ்விலை கொள் முதலில் பாதியாம்.

பாருங்கள் கனவான்களே ஆங்கில நூல்களின் விரிவை. பல பிரிவான ஆங்கில நூல்களில் ஒவ்வொரு பிரதி வாங்கி ஒரு நூல் நிலயம் ஸ்தாபிக்க வேண்டுமானால் லக்ஷக் கணக்காக ரூபாவேண்டும். தோட்டம் வைத்தல், கோழிவளர்த்தல், கால் நடைகளை வளர்த்தல் தேகப்பயிற்சி யாதிய விஷயங்களைப்பற்றி மட்டும் நூற்றுக் கணக்காகப் புஸ்தகங்கள் இருக்கின்றன.

சென்னை ஹெஜின்பாதம் கம்பெனியாரின் ஒரு முழு இங்கிலிஷ் புத்தக விலைப் பட்டியையும், ரிப்பன் பிரஸின் தமிழ் புத்தக

விலைப் பட்டியையும் வாங்கி ஒப்பிட்டுப் பார்ப்போருக்கு ஆங்கிலத் தமிழ் இலக்கியங்களின் பெருமை சிறுமை தெள்ளிதின் விளங்கும்.

ஆங்கிலேயர் மூளை இங்நிமிஷத்திலும் உழைத்துக் கொண்டே இருக்கிறது. தினந்தோறும் புதுப் புது நூல்கள் வெளிவந்த வண்ணமா யிருக்கின்றன.

1923-ம் ஆண்டில் இங்கிலாந்தில் 9246 புதிதாய் அச்சிட்ட நூல்களும் 3028 புதிதாய் எழுதப்பட்ட நூல்களும் வெளிவந்துள்ளன.

நாமோ பழம் பொருமை பேசிப் பேசி மனப்பால் குடித்து மகிழ்வடைகின்றோம். முன்னோர் வருந்தித் தேடி வைத்த நூல்களே நமக்கு வினையாக முடிந்தன. கடற்கோளுக்கும் கறையானுக்கும் இரையான ஏனைய நூல்களைப்போல் இப்பொழுதுள்ள நூல்களும் ஏன் இரையாகா தொழிந்தன வென்றுகூட சிலகால் நான் எண்ணியதுண்டு.

வறியராயிருப்போர் வருந்தி யுழைத்துச் சீமான்களாகின்றனர். பரம்பரைச் சீமான்கள் பழம்பெருமையை யெண்ணி உழைப் பற்றுப் பாழடைகின்றனர். ஆகவே பூர்வ இலக்கியமே இல்லாதிருந்தால் தமிழர் உழைப்புடையவர்களாகி காலகதிக் கேற்றவாறு நூல் எழுத முன் வரக்கூடுமென்பது என் கருத்து.

நேற்றுதித்த தெலுங்கு மலையாள மாதிய பாஷைகள், ஆங்கிலக் கல்வி முறை நமது நாட்டில் பரவத்தொடங்கியபிறகு, வளம் பெற வளர்வது கண்டும், நமது படிப்பாளிகள் வீண்காலம் போக்கலைப் பார்த்து இதயம் பிளவுபடுவோர் தொகையை மிகுதியாய்க் காணோமே.

தமிழகத்தார் கருத்தைப் புதுவழிப் படுத்துவான், அத்தி பூத்ததுபோல் ஒரு மாதவய்யரும், ஒரு பவானந்தம் பிள்ளையும், ஒரு வேதாசலமும், ஒரு நமசிவாய முதலியாரும், ஒரு கிருஷ்ணசாமி சர்மாவும், ஒரு வா. வே. சு. அய்யரும் தமிழகத்தே தோன்றி யிருப்பது யார் செய்த பாக்கியமோ? (எடுத்துக் காட்டுக்காக மட்டும் சில பெயர்களைச் சொல்லி வைத்தேன். இவர்களைப் போன்ற உழைப்பாளிகள் இன்னும் பலர் இருக்கின்றனர்.)

சுதேசமித்திரன் திராவிடன், நவசக்தி, தமிழ்நாடு தேச சேவகன் லோகோபகாரி ஆதிய பத்திரிகைகளும் பஞ்சாமிர்தம் லக்ஷ்மி, விவேக போதினி, குமரன் ஆதியமாதப் பத்திரிகைகளும் தமிழகத்தாருக்கு புத்தறி வூட்டுவான் செய்துவரும் வேலையும் போற்றற் பாலதே.

ஒரு கோடியே எண்பது லக்ஷம் மக்களால் வழங்கப்படும் தமிழ் மொழியைப் புஷ்டிப்படுத்த மேலே கூறிய உழைப்பாளி

களைப் போன்றவர்கள் ஆயிரக் கணக்காக முன்வரல் வேண்டாமா? தமிழகத்தார் பின் நோக்கும் குணமற்று முன் நோக்கும் குணம் பெற்று பூர்வப் பெருமையடைய முந்துற வேண்டாமா? பழந்தமிழ் நூல்களோடு அறிவு முற்றுப்பெற்று விட்டதென்ற தப்பெண்ணம் நம்மவரைவிட்டு நீங்க வேண்டாமா?

தமிழகத்தீரே! அறிவு முற்றுப் பெற்று விடவில்லை. அறிவு நிமிஷந்தோறும் வளர்ந்தேறிக்கொண்டே இருக்கின்றது. நூல்கள் அறிவைச் சம்பாதிப்பதற்குரிய துணைக் கருவிகளே. முன்னோர் நூல்களைத் துணையாகக்கொண்டு மெய்யறிவு நிரம்பிய பிரபஞ்சத்தை உற்று நோக்கி நமது அறிவை விருத்திசெய்தலே சாலச் சிறப்பாம்.

அறிவு பல திறத்தது. நூலறிவு மெய்யறிவின் ஒரு பகுதி. நூலறிவுடையோரே படிப்பாளிகளென்றெண்ணுவதும் தப்பாம்.

"சிரம்பார்த்தானீசனயன் தேவி முகம் பார்த்தான், கரம் பார்த்தான் செங்கமலக் கண்ணன்" என்று புலவர் திலகரும் புகழும்படி கலைவெளுக்கும் வண்ணனும், கைபட்ட அளவிலே நித்திரைபோமாறு சுகமாக க்ஷௌரம் செய்யும் மயிர்வினைஞனும் வரப்படிதேய விரைப்படி விளைவிக்கும் உழவனும், மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் அமைக்கும் சிற்பியும், அழகுக்கழகு செய்யும் அணிபல ஆக்கும் பொற்கொல்லனும் இயற்கை நலம் விளங்கச் சித்திரமெழுதும் சித்திரகாரனும், கல்லும் கனிவுறப் பாடும் பாடகனும், திரைகடலோடித் திரவியம் தேடும் வர்த்தகனும், மோட்டார் வண்டியை நிறுத்தும் 'பயில்வானும்' போர்முனையில் முன்வைத்தகால் பின் வாங்காது சமர்புரியும் போர்வீரனும், யானை புலி சிங்கமாதிய வன விலங்குகளைப் பழக்கியாட்டும் ஸர்க்கஸ்காரனும் மற்றும் உலகியல் வெற்றிபெற உழைக்கும் தொழிலாளரும், உற்று நோக்கில், படிப்பாளிகளே யாவர்.

பிரபஞ்ச வெற்றிக்கு ஏட்டுக் கல்வி மட்டும் போதாது. ஏனைய கல்விகளும் இன்றியமையாதனவே. தமிழுலகம் ஏட்டுக் கல்வியே தஞ்சமென எண்ண எண்ணி வாழ்கின்றது. தமிழகத்திலே தொழிற் கல்வி இல்லை; வர்த்தகக் கல்வியில்லை; சித்திரக்கலை பாழாய் விட்டது; தமிழர் சங்கீதம் ஒப்பாரி மட்டில் நின்று விட்டது. சிறுவர் சிறுமியர்களின் மனப்பாங்கறிந்து நாம் கல்வி கற்பிப்பதில்லை, சில குழந்தைகளுக்கு சங்கீதத்தில் இயல்பாகவே வாசனையிருக்கின்றது. பாடல் நடைபெறும் இடங்களுக்கு குழந்தைகள் இயற்கை வாசனையால் இழுக்கப்பட்டுச் செல்லுங்கால், பெற்றோர் அக்குழந்தைகளை அதட்டி யடித்துப் பயப்படுத்துகின்றனர். அச்சிறுவர்களும் தம்மிடத்து இயல்பாயமைந்த சங்கீத ஞானத்தை விருத்திசெய்ய முடியாது பாழ்படுகின்றனர்.

தமிழகத்தாருக்கு

சில பிள்ளைகளுக்கு சித்திரக்கலையில் வாசனையிருக்கிறது. எப்பொழுதும் படங்கள் வரைவதிலே காலத்தைப்போக்கும் அவரை, பெற்றோர் வீணரென்றும் சோம்பரென்றும் தப்பாகப் பழித்து நையப் புடைக்கின்றனர். இதனால் சிறுவர் மனத்தமைந்த சித்திர கலாஞானம் அழிவடைகின்றது.

ஒரு பெரியவர் இறந்துவிட்டால். சரமகவிபாடப் புலவோர் பலருளர். அப்பெரியார் ஞாபகத்தை நிலைநிறுத்த உருவச்சிலை அமைக்கவும் உருவப்படம் எழுதவும் சிற்பிகளும் சித்திரகாரரும் தமிழுலகத்து இல்லை.

பண்டைக்காலத்து, தமிழ் நாட்டிலே பல வீரர்கள் வாழ்ந்திருந்ததாக நமது நூல்கள் கூறுகின்றன. அவ்வீரர்களின் ஞாபகார்த்தமாய் நாட்டப்பெற்ற வீரக்கல்களும் ஆங்காங்கு இப்பொழுதும் காணப்படுகின்றன.

தற்காலத்திலே தமிழகத்து எத்தனை வீரர்கள் உளர். தமிழர்களின் படைக்கலப் பயிற்சியும் சிலம்ப வித்தையும் எக்குற்றன? கீரைத்தண்டு வேர் பிடுங்கவும் ஏலேலப் பாட்டுப் பாடுமளவு நம்மவர் துர்ப்பலர் ஆய்விட்டனரே.

சிற்பிகளும் சித்திரகாரரும் சங்கீத வல்லுநரும் வீரர்களும் இல்லாத சமுதாயம் உயிர் நீங்கிய உடம்பை ஒப்பதன்றோ? நம்மவரின் ஏட்டுக் கல்விப் பைத்தியத்தினாலன்றோ புலவர் வறுமை தமிழகத்துக் குடிகொண்டிருக்கிறது. தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்த தமிழ் வல்லோர் வயிற்றை நிரப்புதற்கு வகை யறியாராய் வாடுங்காலம் எப்பொழுது நீங்கும்.

தமிழகத்தீரே! நாம் நல்வாழ்வடைய வேண்டுமாயின்—நாம் பூர்வீகப் பெருமை பெறவேண்டுமாயின்—நம் தேசம் முன்னேற வேண்டுமாயின்—நமது வறுமை அழிந்தொழிய வேண்டுமாயின்—நமது அடிமைத்தனம் நீங்கவேண்டுமாயின்—நமது கல்விப்பயிற்சி முறை முற்றிலும் மாறுதலடைய வேண்டும். நம்மவர் கருத்தெல்லாம் புதுவழிச் செல்லவேண்டும். நம்மவர்க்கு இயற்கையாராய்ச்சித்தாகம் தீவிரமா யுண்டாகவேண்டும். சுற்றுச் சார்புகளை உற்று நோக்கி உண்மை யறிவு பெறுங் குணம் நம்மவர்க்கு மிகுதியாக வேண்டும்.

"**நமக்குக் கற்பிக்கப் பட்டவைகளை யெல்லாம் மறந்த பிறது ஏஞ்சி நிற்பது எதுவோ அதுவே கல்வி**" என்கின்றார் ஒரு மேனாட்டுப் பெரியார்.

தமிழகத்தீரே இப்பொன் மொழியின் உட்பொருளை ஊன்றிப் பாருங்கள்.

யக்ஞம்

ஸ்ரீமாந். தா. ராமகிருஷ்ணன் எழுதியது.

நமது முன்னோர்கள் ஒவ்வொரு சொற்களையும் நன்ருக ஆராய்ந்து அமைத்திருக்கின்றனர். ஒருமொழி பலவகைக் கருத்துக்களையும் விளக்கத் தக்கதாக விருக்கின்றது. அக்கருத்துக்கள் வெளிப்படையாகத் தோன்ற மாட்டா. அவற்றை நுணுகி யாராய்வார்க்கே புலனாதல் கூடும். இக்காலை, அறிஞர் பலர் மொழியாராய்ச்சி செய்து வருகின்றனர். இச்சிறிய கட்டுரையில் 'யக்ஞம்' என்னும் மொழியின் பொருட் காரணம் யாதென்பதை ஆன்ருேர்களின் உரை வாக்கியங்களி னுதவியால் சிறிது ஆராய்வான் புகுந்தனன்.

யக்ஞமென்பது வேதங்களால் விதிக்கப்பட்டதோர் சிறந்த கருமம். வேதங்கள் இறைவ னருண்மொழிகள். அவை, இருக்கு, யசுர், சாமம், அதர்வமென்ப. வேதங்கள் முறையே அறிவு, கருமம், பக்தி, ஞானம், என்னும் நாற்பொருட்களையும் உபதேசிக்கின்றன. அறிவையுணர்த்துகின்ற முதல் வேதம் முதன் மந்திரத்து 'யக்ஞஸ்ய' என்னும் மொழியும், கரும வியல்புகளைப் போதிக்கின்ற இரண்டாவது வேதம் முதன் மந்திரத்து 'சிரேஷ்ட தமாய கர்மண' என்ற மொழிகளும் உபதேசிக்கப் பெற்றிருக்கின்றன. ஆகவே, யக்ஞமென்பது (சிரேஷ்ட கர்மண) உயர்ந்த கருமங்களைச் செய்தலென்னும் பொருள் தருகின்றது. வேதத்து, நரமேதம், அசுவமேதம், கோமேதம், அஜமேதம், என்னும் யாகங்களில் அவ்வவ்வுயிர்களை வதைத்துப் பலியிடவேண்டுமென்று விதிக்கப்படுமாயின் அவை சிறந்த கருமங்களாகா. பரம கருணு நிதியாகிய இறைவனது மொழிக்கு மிழுக்காம். சமய குரவர்களும் கருணையற்ற இவ்வுயிர்க் கொலைகளைக் கடிந்துள்ளார். இறைவனதியல்பிற்கும் சான்ருேர்களது கருத்துக்களுக்கும் மாறுபடாது, இவ்வினைகள் எத்தகைய சிறந்த கருமங்களை உபதேசிக்கின்றன வென்று ஆராய்வதன் பொருட்டு முதற் கண் யக்ஞமென்னுஞ் சொல்லின் பொருளைச் சிந்திப்பாம்.

யக்ஞமென்னும் மொழிக்கு வேத நிகண்டில் (அத். 3-17) பதினைந்து உரைச்சொற்கள் கூறப்படுகின்றன. அவை : யக்ஞம், வேநம், அத்வரம், மேதம், வித்தம், நாரியம், சவநம், ஹோத்திரா, இஷ்டி, தேவ-தாதை, மநம், விஷ்ணு, இந்து, பிரஜாபதி, கர்மம் என்பன. அவற்றின் காரணப் பொருட்களாவன :—

யஜ்-தேவபூஜா-ஸம்கதி கரண-தானேஷு'.

யக்ஞம்

1. யக்ஞம் யஜ,—தேவபூஜா—ஸங்கதி கரண—தாநேஷு யக்ஞமென்பது யஜ என்னுந் தாதுவடியாகப் பிறந்து 'போற்றல்—ஒற்றுமை—ஈகை' என்னும் பொருட்களைக் குறிக்கின்றன. இம்மூன்று சொற்களும் மக்களது வாழ்க்கைக் கின்றியமையாத சிறந்த கடமைகளை உணர்த்துகின்றன. தம்மின் மேம்பட்ட சான்றோர்களைப் போற்றல், அவர் விரும்பியன புரிதல், அவர் வழியொழுகல், தம்மையொத்த அறவொழுக்க முடையார்களுடன் கூடி வாழ்தல், தம்மினிழிந்தார்க்குப் பல வகையாலும் உதவி புரிதல், இவ்வினைகளுக்கு யக்ஞமென்று பெயர். இச்செயல் எவ்வகைப் பட்டார்க்கும் ஏற்ற பெற்றியது. இனி, அக வாழ்க்கையில் ஆன்ம சன்மானம் (self-respect) அன்புடைமை, தயாள சிந்தனையாதிய குணங்களைப் பெருகச் செய்தல். இத்தகைய ஒழுக்க முடையார்களே சமூக வாழ்க்கையில் சிறப்புடையார். மக்களை சமுதாய வாழ்க்கைக்குரியவர்களாக இந்நெறியில் பண் படுத்துவதே யக்ஞங்களின் சிறந்த நோக்கம்.

வேந—கதி—ஞான—சிந்தா—நிசாமன— வாதித்ர—கிரகணேஷு'

2. வேநம்—'வேந—கதி—ஞாந—சிந்தா—நிசாமந—வாதித்ர க்ரஹணேஷு' இயக்கம், மெய்யுணர்வு, சிந்தனை, நோட்டம், பஜனை, அடைதலென்றும்; [1] அழகுறச்செய்தல், [2] நடைபெறுவித்தல், [3] இறைவனடி வணங்குதல், [4] விரும்புதல், [5] அறிவிற் சிறந்தவன் என்றும் பொருள் படுகின்றன. எனவே, சமுதாய வாழ்க்கையில் நிகழ்த்தப் பெறுவனவாகிய, அறிஞர்பாற் றோன்றும் புதிய வியக்கங்கள், அறிவு முதிர்ச்சி, மெய்ப்பொருளாராய்ச்சி, யாவரையுஞ் சமமாகக் காணுதல், ஒருவரோடொருவர் உதவி புரிதல், அலங்கரித்தல், அன்னியோன்னிய உபசாரனை, அறிவு வளர்ச்சிக்கான காரியங்களைச் செய்தல், சங்கீதப் பயிற்சி, பஜனை முதலியவற்றை உணர்த்துகின்றன.

'த்வரதிஹ் வதகர்மா'

3. அத்வரம்—'த்வரதி: வதகர்மா' (நிகண்டு அத், 2-19) த்வரம் என்பது கொல்லுதல். நத்வரம் அல்லது அத்வரம் என்பது கொல்லாமை. பிறிதொன்றற்கும் துன்பம் விளைவியாத செயல் அத்வரமென்னும் அஹிம்சா கர்மம். எச்செய்கையினால் பிறவற்றிற்கு துன்ப முண்டாகின்றதோ, அச்செய்கையை 'அத்வரம்' என்று

---

1. வேந்திஹ் காந்திகர்மா நிகண்டு அத். 2-6
2. வேந்திஹ் கதிகர்மா ,, ,, 2-14
3. வேந்திஹ்அர்சதிகர்மா ,, ,, 3-14
4. வேந்திஹ் காமயதெ ,, ,, 12-29
5. வேநஹ் மேதாவிநாம ,, ,, 3-15

கூறுதல் பொருந்தா. எனவே, யாகங்களில் உயிர்வதை முற்றிலும் விலக்கானதென்பது இம்மொழியினால் நன்கு உணர்த்தப்படுகின்றது.

"மேத்ரு—மேதா—ஹிம்ஸநயோஹ்—ஸங்கமேச'

4. மேதம்—'மேத்ரு,—மேதா—ஹிம்ஸநயொ:—ஸங்கமேச' மேத்ரு வென்னுந் தாதுவினின்றும் பிறந்து, 'அறிவுப்பெருக்கம், அழிவு, ஒற்றுமை' என்னும் பொருட்களைத் தருகின்றன. அறிவின் மிக்காரைச் சார்தலும், அறிவை வளர்த்தலும், அவற்றிற் கிடையூறுன வைகளை அழித்தலுமாகும். இதன்றியும் யோகிகமாக: கூட்டுறவு, அந்நியோன்னிய நட்புரிமை, ஒற்றுமை, அறிவுடைமை, மிக நெருங்கிய உறவு, அன்புடைமை, அறிவு மலர்ச்சி, தூய்மை, வீரத்தன்மை, யக்ஞம் (அல்லது, வணக்கம்—ஒற்றுமை. ஈகை) என்னும் பத்து விதப்பொருட்களுமுண்டு. மேத்ரு வென்னும் மொழிக்கு பொருள் கண்ட பாணினி முனிவரது கருத்து நுணுகியாராயத்தக்கது. ஹிம்ச வென்பதை, மேதா சங்கமே என்னுமிரண்டு சொற்களுக்கு மிடையில் நடு நிலை விளக்கமாக அமைத்திருக்கின்றார். ஒருவன் அறிவை வளர்ப்பதற்கும் ஒற்றுமையுண்டு பண்ணுவதற்கும் முயன்றால், அவற்றிற் கெதிரிடையாகத் தோன்றுகின்றவைகளை அழித்தல் வேண்டுமென்பது கருத்து. அறிவுச் சக்தியும் (Power of intellect) ஒற்றுமைச் சக்தியும் (Power of unity) துணைக்கொண்டு கூட்டுறவு முதலிய பத்துக் குணங்களையும் விருத்தி செய்வது காப்பாற்றும் வன்மை (Protective forces) யென்றும்; ஹிம்சை அல்லது அழித்தலென்பது அபிவிருத்திக்கெதிரானவைகளை யொழிக்கு வன்மை (Destructive forces) யென்றுங் கொள்ளற் பாலன. மக்களுயர்ச்சிக் குரித்தானவற்றை யோம்பலும்; அல்லாதவற்றை யொழித்தலும் இன்றி யமையாதன. எனவே, மக்களது அகவொழுக்கிலும் புறவொழுக்கிலுங் கொள்வன கொண்டு, தவிர்வன தவிர்த்து சமுதாய வாழ்க்கையை சீர்மைப்படுத்துவது மேதமென்பதின் உட்கிடை. இச்சொற் கருத்தமைதியின் சிறப்பினால்; நரமேதம் அசுவமேதமென்று யாகங்களைக்குறிப்பதற்கு இம்மொழியொன்றையே மிகுதியும் வழங்கலாயிற்று.

'வித்-ஞானே; வித்-ஸத்தாயாம்; வித்-லாபே; வித்-விசாரணே; வித்-சேதநாக்யான நிவாசேஷு'

5. வித்தம்—"வித்—ஞானே; வித்—ஸத்தாயாம்; வித்—லாபே; வித்—விசாரணே; வித்—சேதநாக்யான நிவாசேஷு' வித்—என்னுந் தாதுவினின்று தோன்றி, மெய்யறிவு, கடவுளுண்மை, ஊதியம், சிந்தனை, சேதநம், விரிவுரை, இருக்கை யென்னும் பொருட்களையுடைத்தாயிருக்கின்றது. இம்மொழிக்கு அகராதியில், பண்டிதன், துறவி, தன்னலமின்மை, மெய்யுணர்வு, போர் என்னுமுரைகள் காணப்படுகின்றன. ஆகவே, உலகத்தில் அறிவு வளர்ச்சி, மெய்ப்பொருளுணர்வு, சன்மார்க்கம், தந்நலத்தியாக மாதியவற்றை

வளர்ப்பதும் ; அவ்வளர்ச்சிக் கிடையூறானவைகளை அழிப்பதுமாகிய வேட்டற்றொழிலை வித்தமென்னுஞ் சொல் உணர்த்துகின்றது.

' ந்ரு-நயெ,'

6. நாரியம் (நாரி)—' ந்ரு—நயே ' (to lead) மக்களுயர்ச்சியின் பொருட்டு அறவொழுக்கம், நீதிமுறையாதியவற்றைச் செம்மையுறச் செலுத்தல்.

' ஸூ—ப்ரஸவைச்வர்யயோ '

7. ஸவநம்—' ஸூ—ப்ரஸவைச்வர்ய யோ ' புதியன வாக வொன்றைத் தோன்றச் செய்தல், நிருமாணித்தல், உயர்நிலையடைதல் என்பன.

' ஹு-தாநா தாநயோ-அதநேச '

8. ஹோத்ரா—' ஹு—தாநா தாநயோ,—அதநே ச ' பிறருக்கு உதவி புரிதல், பிறரிடமிருந்து உதவி பெறுதல், உணவருந்தல் என்பன. நிகண்டில் ' பாஷா ' வாசா, (அத். 1-11) மொழி (பாஷை), சொல் என்னும் பொருட்களுமுள. ஐத்ரேய ப்ராஹ்மணம் ' வாக் வையஜ்ஞ: ' (5–4) வாக்கு யக்ஞமென்றுரைக்கின்றது. எனவே, வாக்கு தாநம் அல்லது ஆதாநம், மொழி(பாஷை) களைக் கற்றல், கற்பித்தலும் யக்ஞமென்று கொள்ளத் தக்கவை.

9. இஷ்டி—இதற்கும் யக்ஞமென்ற சொல்லுக்கும் பொருளொன்றே. இச்சை, இஷ்டம் அல்லது விருப்பம். விருப்பத்துடன் செய்தலென்னும் பொருள் தருகின்ற 'வேள்வி' என்னுந் தமிழ்மொழி ஒத்திருத்த லுணர்க.

10. தேவ—தாதை—தெய்வத் தன்மையைப் பரவச்செய்தலென்பது கருத்து. நற்குணங்களெல்லாம் தேவாம்சமானவை. இறைவனதியல்பான தன்மை. மக்களிடத்துள்ள இழிகுணங்களையொழித்து உயர்வான சத்துவ குணத்தை நிலைபெறச் செய்தல்.

' மஹ—பூஜாயாம் ; மம்ஹி—வ்ருத்தௌ ; மம்ஹி—பாஷார்த்த '

11. மகம்—' மஹ—பூஜாயாம் ; மம்ஹி—வ்ருத்தௌ ; மம்ஹி—பாஷார்த்த' மஹ, மம்ஹி, என்னுந் தாதுக்களினடியாகத் தோன்றி, வணங்குதல், வளர்ச்சி, சொற்பொருள் என்னு முறைகளையுடையது. இம்மொழிக்கு, அகராதியில் போற்றத்தகுந்த, முயற்சியுள்ள, சுறுசுறுப்பான, மகிழ்ச்சியுடைய, வீரமுள்ள என்ற பொருள்கள் காணப்படுகின்றன. எனவே, மக்களிடத்து இத்தகைய குணங்களுண்டாமாறு செய்தல்.

12. விஷ்ணு—' விஷ்ணுர்-வ்யாப்தௌ.' வியாபகச் செயல் அல்லது யாண்டும் பரவுமாறு செய்யும் வினை. தம்மளவு நலனடை

யுஞ் செய்ல் சங்குசித கருமமென்றும், உலகத்தவரெல்லாம் நலம் பெறுஞ் செயல் வியாபக கருமமென்றுஞ் சொல்வர். ஈண்டு விஷ்ணு வென்னும் மொழி வியாபக கருமம் அல்லது யாண்டும் பரப்ப வேண்டுவன வாகிய நற்செயல்களைக் குறிப்பிடுகின்றது.

13. இந்து—இந்து, சோமன், சந்திரன் என்ற சொற்கள் சாந்தத் தன்மையை யுணர்த்துவன. ‘உந்தி-க்லே-தநே’ என்னுந் தாதுவடியாகப் பிறந்தது. உலகத்தை சமாதான நிலையில் நடை பெறச் செய்யுந் தொழிலென்பதைப் போதிக்கின்றது.

14. பிரஜா-பதி—உலகத்தில் பிரஜை என்ற மக்களுக்குத் தலை மையாக விருந்து, அன்னாரை நன்னெறிக் கண்ணே யொழுகுமாறு செலுத்தப்படுஞ் செயல். மேதமென்னும் மொழிக் குரைத்த பத்துப் பொருட்களும் இச்சொற்கு மிகச் சார்புடையது. ‘பத்-ஐக்ஸ்யே’ பத் என்ற தாதுவினின்று பதி யென்பதுண்டாயிற்று. இது எல்லாச் செல்வங்களுமுடைய வென்று பொருள்படும். எனவே, மக்களுக்கு வேண்டுவனவாகிய செல்வங்களனைத்தையும் பெற்றிடற்குரித்தாஞ் செயலென்று ‘பிரஜாபதி’ யென்னும் மொழியினால் தெளியக் கிடக்கின்றது.

15. க(ஸ)ர்மம்—கர்மியென்பது வெம்மை, வெப்பம், மக்களி டையே வெம்மை பரவும்படியாகச் செய்யும் வினை.

ஆகவே, இவற்றை தொகுத்துக் கூறுங்கால், யக்ஞமென்னும் மொழிக்கு ; போற்றுதல், ஒற்றுமை, பிறர்க் குதவல், தூயசிந்தனை, கொல்லாமை, அறிவுரை வழங்கல், நீதிபரிபாலனம், முயற்சி யுடைமை, இன்பம் நுகர்தல், தெய்வத்தன்மையடைதல், உயர்பதவி பெறுதல், விகாசம், சாந்தி ஆளுகை, உடல் வளர்ச்சி, யென்னும் பொருட்கள் பெறப்பட்டன. உலகத்தில் ஒவ்வொரு மக்களும் இத் தகைய குணநலன்களையடைந்து, சமுதாய வாழ்க்கை இனிது நடை பெறுதல் வேண்டுமென்பதே யக்ஞங்களின் உட்கருத்து. யக்ஞ மென்பதற்கு இன்னும் வேறுவகைப்பட்ட பொருட்களும் தத்துவங் களுமுண்டு. அவையனைத்திற்கும், இப்பதினைந்து உரைச் சொற் களும் தாயகமானவை. அத்வரமென்பதினால் கொல்லாமை வற் புறுத்தப் படுகின்றது. இதற்கு மாறாக, மேதமென்னுஞ் சொல் லினடியாகத் தோன்றிய நரமேதம், அசுவமேதம், அஜமேதம் முதலிய யாகங்களில் மக்கள் விலங்குகளை வதைத்து, அவற்றின் ஊனை ஆகுதி கொடுத்தல் வேண்டுமென்று விதிப்பதாகச் சிலர் பொருள் கூறுவர். அவ்வாறு பொருள் கொள்ளுதல் தூய்மையான தும், அருள் நிறைந்ததும், அறவாழியந்தணனது சிறந்த வாய்மொழி யுமாகிய வேதவுரைகளுக்குச் சிறிதும் பொருந்துவன வாகா. மேலே காட்டிய வுரைகளாலும் பெறப்படுமாறு கண்டிலம். மேதம் என்னும் மொழிக்குரைத்த ஹிம்சையென்னும் பொருளால் கொள்ளப்படு மாலோவெனின் ; அதுவும் பொருந்தா.

அத்யாபநம் பிரஹ்மயக்ஞ: பித்ருயக்ஞஸ்து தர்ப்பணம்,
ஹோமோ தைவோ பலிர்பௌதோ நரயக்ஞோ அதிதிபூஜநம்.
மநுஸ்மிருதி, அத். 3-70.

" கல்வி கற்பித்தல் பிரஹ்ம யக்ஞம் ; தாய்தந்தையரை மகிழ் வித்தல் பித்ருயக்ஞம் ; ஓமம் வளர்த்தல் தேவயக்ஞம், புழுக்களனைய சிற்றுயிர்களுக்கு உணவளித்தல் பூதயக்ஞம், விருந்தோம்பல் நர யக்ஞம்" என்று மனு பகர்கின்றார். பிதிர் மேதத்திற்கு பிதாவி னுடலை வதைத்து ஊனை ஆகுதி கொடுப்பதற்கு எவருந்துணியார். இவ்வாறே நரமேதம் அசுவமேதம், அஜமேதம் முதலியவற்றிற்கும் ; அவ்வவ்வுயிர்களைக் கொன்று ஊனைப் பலிகொடுத்தலென்பது முற் றிலும் வேதவிரோதமான கொள்கை. இனி, ஹிம்சை யென்பதி னல் பெறப்படுவதியாதெனின், நன்மை பயப்பனவொன்றைக் கைக் கொண்டால், அதற்கெதிரிடையான தீமை பயப்பனவொன்று அழிந்துபடுமென்பதே. சுகாதார விதிமுறை யொழுகுவோன் நோய்களை யழிக்கின்றான். இறைவனடிக் கிடையறா தன்பு செலுத்து வோன் பாவங்களைச் சங்கரிக்கின்றான். உண்மை நெறியை நிலைநாட்டு வோன் பொய்யானவனைத்தையும் நாசஞ்செய்கின்றான், இதனை குணத்வந்துவம் (ஒன்றை யொன்று பிரியாத் தன்மை) என்பர். மந்யு: பஸூ: என்பனவாதி வாக்கியங்களால் ஞானபி விருத்திக்குத் தடைகளாகிய,அகங்காராதிபாச விருத்திகளை அழித்தல் அத்யாத் மீக யக்ஞமென்று உபநிடதங்கள் சாற்றுகின்றன. ஆகவே, ஹிம்சை யென்பதினால், ஆத்மீக (அக) வாழ்க்கைக்கோ, சமுதாய (புற) வாழ்க்கைக்கோ இடையூறானவைகளை அழித்தலென்பது தெளிதற் குரித்தாம்.

வேதங்களில், நரமேதம், கோமேதம் அசுவமேதம், அஜமேதம் முதலிய யாகங்களுக்கு உயிர்களை வதைத்துப் பலியிடுதல் வேண்டு மென்று விதிக்கப் பட்டிருக்கின்றன வென்றுரைப்பார் ; இம்மந் திரங்களை யாராய்தலவசியம்.

(1)	அச்வம்...மா ஹிம்ஸிஹ......	யசுர்வேதம்.	அத்.	13-41
(2)	காம் மாஹிம்ஸீரதிதிம் விராஜம்	,,	,,	42
(3)	அவிம்...மாஹிம்ஸிஹ......	,,	,,	43
(4)	இமம் மாஹிம்ஸீர்த்விபாதம் பசும்	,,	,,	47
(5)	மாஹிம்ஸிஷ்ட பிதரஹ் கெநசிந்நொ	,,	,,	16-62
(6)	மாஹிம்ஸிஹ புருஷம்......	,,	,,	16-3
(7)	மாஹிம்ஸிஸ்தந்வா ப்ரஜாஹ	,,	,,	12-32

(1) குதிரைகளுக்கிடுக்கண் செய்யாதிரு (2) கொல்லத் தக்க முரட்டுப் பசுவாயிருப்பினும் அதனை வருத்தாதிரு, (3) ஆட்டினுக் கல்லல் புரியாதிரு, (4) இருகாலுள்ள மக்கள் முதலிய உயிர்களுக்கு

துன்பம் விளையாதிரு, (5) பிதாவே! யாதொன்றையும் வருத்தா திருக்கச் செய்வாய் (6) மனிதனை இம்சியாதிரு, (7) பிரஜைகளுக்குத் துன்பஞ் செய்யாதிரு.

மா ஹிம்ஸிஷ்டார் வஹது முத்யமாநம்

அதர்வவேதம் 14-2-6

"சவாரி செய்கின்ற காளை முதலியவற்றை விரைந்து செல்லு மாறு துன்புறுத்தா திருப்பாயாக."

வ்ரீஹிமத்தம் யவமத்தமதொ, மாஷமதொ திலம்,
ஏஷ வாம் பாகொ நிஹிதொ ரத்நதெயாய தந்தௌ."

அதர்வவேதம் 6-140-2

"அரிசி, தானியாதிகள், உளுந்து, எள் முதலியவற்றை சமைத் துப் புசியுங்கள்; அவை உங்கள் அழகிய பற்களுக் கேற்ற உணவு களா யிருக்கின்றன."

ஆரே கொ-ஹா ந்ரு-வதொ வொ அஸ்து.
ஆரே கோ-ஹா ந்ரு-ஹா வதோ வோ அஸ்து.

இருக்குவேதம் 7-56-16

ஆரே ஹெ-கோக்நமுத பூருஷக்நம்.

இருக்குவேதம் 1-114 10

"பசுக்களையும் மனிதர்களையுங் கொன்றவர்களை தேசத்திற்கப் பால் புறக்கணித்து விடு."

மேற்கூறிய மந்திரவுரைகளால், மனிதர், குதிரை, பசு, எருது, ஆடு முதலியவுயிர்களைத் துன்புறுத்தலுங் கொலை செய்தலுங் கூடா வென்றும்; உண்ணுதற்குத் தக்க தல்ல வென்றும்; கொலை செய் மாக்களை தேசத்திற்கப்பால் புறக்கணித்தல் வேண்டு மென்றும் விதிக்கப் பெற்றிருக்கின்றன. ஆதலால் தூய்மையான வேதவுரை கள் உயிர்களை வதைத்து யாகங்கள் செய்யுமாறு எவ்விதம் விதித்தல் கூடுமென்பது அறிஞர்களால் சிந்திக்கத் தக்கன. வேதவுண்மைகளை யுணராது மாறுபடவொழுகிய, அக்காலத்து மாந்தர்களை நோக்கி; உத்தரவேதமுடையார் சாற்றியவை எக்காலத்தும் போற்றத் தக்கன. ஓம்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை"
"அவிசொரிந் தாயிரம் வேட்டலினொன்ற
னுயிர் செகுத் துண்ணாமை நன்று"

"Our Secret Foes and Fight for Health."

"நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்திற்குச் சண்டையும்."

ஸ்ரீமாந் ஏ. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் எழுதியது.

(காபி ரைட்)

நுண்ணிய கிருமிகளாலுண்டாகுஞ் சில வியாதிகள்.

430-ஆவது பக்கத் தொடர்ச்சி.

அம்மை, வாந்திபேதி, கொள்ளைநோய் (Plague), குஷ்டம், விஷசுரம் அல்லது மலேரியாசுரம் (Malaria), சீதபேதி, தட்டம்மை, கண்டக்கரப்பான் (Diphtheria) க்ஷயம், அதிசாரசுரம் (Typhoid fever), முடக்குச்சுரம் (Dengue fever) முதலிய வியாதிகள் நுண்ணிய கிருமிகளா லுண்டாகின்றன. இவ்வியாதிக் கிருமிகள் ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கொல்லுகின்றன; அதனால், நமக்கு இவ்வளவென்று சொல்லமுடியாத பொருளும் காலமும் நஷ்டமாகின்றன வல்லவா? ஆகலின், தொற்று'வியாதிகளைத் தடுப்பதற்குத் தெரிந்துகொள்வது என் முக்கியமான தென்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

தொற்று வியாதிகளைப்பற்றிய நான்கு உண்மைகள்.

(1) எல்லாத் தொற்றுவியாதிகளும் நுண்ணிய கிருமிகளாலே யுண்டாகின்றன. நுண்ணிய கிருமிகள் நம்முடைய உடம்பினுள்ளே வளர்ந்து நம்மை விஷப்படுத்துகின்றன.

(2) நோயாளியினிட மிருந்துண்டாகும் வியாதிக் கிருமிகளே தொற்று வியாதிகளைப் பரவச்செய்கின்றன. ஒருவன் தொறறுவியாதியால் துன்பப்படுகிறபோது அவ்வியாதியின் நுண்கிருமிகள் அவனுடைய உடம்பிலிருந்து கழியுங் கழிவுகளி (Wastes) லிருக்கலாம்; அவன் இருமி உமிழும் எச்சிலிலிருக்கலாம்; அவன் சருமத்திலிருந்து (skin) கழியும் அசடுகளி (scales) லிருக்கலாம். அக்கிருமிகள் இன்னொருவன் உடம்பினுள் சேருமாயின் அவனும் நோய் கொண்டு விடுவான்.

(3) வியாதிக் கிருமிகள் நம்முடைய உடம்பினுள்ளே புகுந்தாலல்லது அவை நமக்குத் தீங்குவிளைக்க முடியாது. நம்முடைய உடம்பினுள்ளே அவ்வியாதிக் கிருமிகள் புகாதபடி செய்துகொள்வோமானல் நமக்கு எவ்வித தொற்று வியாதியும் எப்போதும் உண்டாவதில்லை.

(4) தொற்று வியாதிகளைத் தடுத்துக்கொள்ளக்கூடும். நோயாளியினுடைய உடம்பிலிருந்து கழியும் எல்லாக் கிருமிகளையும் அழித்துவிடுவோமாயின், ஒருவருக்குந் தொற்று நோய் வரமாட்டாது. சனங்களுடைய உடம்பினுள் புகுவதற்குக் கிருமிகள் இல்லாமற் போய்த் தொற்று நோயுந் தொலைந்துபோம்.

சுகாதார முறையின் சிறந்த முதல்விதி.

வியாதிக் கிருமிகளைத் தொலைப்பதற்கு நாம் தெரிந்து செய்யவேண்டிய முதற்காரியமென்ன? நோயாளியினுடைய உடம்பிலிருந்து வரும் எல்லாக் கிருமிகளையும் அழித்து விடுவதேயாம். ஒருவனுக்கு வாந்திபேதியாவது அம்மையாவது குஷ்டமாவது கண்டிருந்தால், அவனுடம்பிலிருந்து வருங் கிருமிகள் மற்றவர்களைத் தொற்றி வியாதியை யுண்டுபண்ணும்படி பரவ விடுவது கூடாது. களைப்பூண்டு விதைகளை (Weed seeds) உன் கைநிறைய வைத்திருக்கும்போதே அவற்றை அழித்துவிடுவது எளிதாகும்; அவ்வாறின்றி, அவ்விதைகளைப் புலத்தில் சிதறினபிறகு அவற்றை அழிப்பது மிகவுங் கடினமாகும்; அதுபோல, நோயாளியினிடமிருந்து வியாதிக் கிருமிகள் கழியும்போதே அழித்துவிடுவது சுலபமாகும்; இல்லையாயின் அவை பரவினபின் அவற்றை அழிப்பதென்ருல் பெருங் கஷ்டமாகும்.

அத்தியாயம் 2.

வியாதிக்கிருமிகள்—**Disease Germs.**

வியாதிக்கிருமிகள். நாம் ஒரு குதிரையை வெகுதூரத்தில் பார்க்கும்போது அதன் உடம்பின்மேலுள்ள மயிர்களைப் பார்க்கமாட்டோமன்றோ? நாம் பார்க்காமற் போனபோதிலும் அக்குதிரையின் உடம்பு முழுதும் மயிர்

களால் மூடப்பட்டே இருக்கின்றது. நம்முடைய கைக ளின்மேல் நுட்பமான கிருமிகள் (germs) ஏராளமாய் நிறைந்திருக்கின்றன. அவற்றைப் பூதக்கண்ணாடியின் உதவியில்லாமல் நாம் பார்க்கமுடியாது. இக்கிருமிகள் மற்ற எல்லா உயிருள்ள பொருள்களைப் பார்க்கிலும் மிக வும் நுண்ணியவையானதால் பத்துலட்சங் கிருமிகளானு லும் அவை ஒருதுளித் தண்ணீரில் நீந்துதற்குப் போது மான இடமுண்டு. கட்டி (boil)யிலிருந்து வரும் சீழில் (pus) இலட்சக்கணக்கான நுண்ணிய கிருமிகள் இருக்கின் றன; ஆனால், அவற்றை நாம் பார்க்க முடியாது. ஈக்களின் கால்களில் ஏராளமான நுண்ணிய கிருமிகள் ஒட்டிக்கொண் டிருக்கின்றன. அவற்றையும் நாம் பார்க்கமுடியாது. இது போலவே க்ஷயரோகி அல்லது வாந்திபேதி நோயாளியி னுடைய உடம்பிலிருந்து கழியும் ஆயிரக்கணக்கான நுண் கிருமிகளையும் பார்க்கமுடியாது. நாம் பார்ப்பதற்கு அக் கிருமிகள் அவ்வளவு நுண்ணியவையா யிருக்கின்றபடி யால் அவற்றைப் பாராமலே அவை எங்கே சீவிக்கின்றன என்பதையும், அவை நம்மை அணுகாதபடி காத்துக் கொள்வது எப்படி என்பதையும் நாம் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

வியாதிக்குக் காரணமான நுண்ணிய கிருமிகள் எங்கிருந் து வருகின்றன? எங்கே நன்றாய் வளர்கின்றன? இக்கிருமி கள் தாவரவகுப்பை (plants) யேனும், பிராணி வகுப்பை (animals) யேனுஞ் சேர்ந்தவை யென்றும், அவற்றுள் சிலவியாதியை யுண்டுபண்ணுவன வாகுமென்றும் நாம் முன்னமே வாசித்திருப்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும். மாமரத்திற்கும் பலாமரத்திற்கும், ஐரோப்பிய குழந்தைக்கும் சீனக் குழந்தைக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்குமோ அதுபோலவே இக்கிருமிகளுக்குக் தோற்றத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாச மிருக்கின்றது. நாம் நம்முடைய தோட்டத்தில் ஓரிடத்தில் பட்டாணி விதையையும், மற்றோரிடத்தில் அவரை விதையையும் நட்டால், பட்டாணிவிதை நட்டதிலிருந்து பட்டாணிக் காயையும், அவரைவிதை நட்டதிலிருந்து அவரைக்காயை யும் நாம் அடைவதல்லாமல், அவரை விதைத்ததிலிருந்து துவரையை அடையமாட்டோம். அது போலவே, வியா

தியை உண்டாக்கும் நுண்ணிய கிருமிகளும் உண்டாகின்றன. அதிசார சுரக்கிருமிகளி (Typhoid fever germs) னின்றும் க்ஷயரோகக் கிருமிகள் (Tuberculosis germs) உண்டாவதில்லை. க்ஷயரோகக் கிருமிகளினின்றும் அதிசாரசுரக் கிருமிகள் உண்டாவதில்லை. இதனால் ஒவ்வொரு நுண் கிருமியும் அதே வகைக் கிருமியினின்றும் உண்டாகின்றதென்பதை நாம் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

இக்கிருமிகள் உஷ்ணமும் ஈரமுமுள்ள இடங்களிலேயே நன்றாய் வளர்கின்றன. அவற்றுள் அநேகம் தண்ணீரிலும் சீவிக்கின்றன. ஈரமில்லாதபடி நன்றாய் உலர்ந்த இடங்களில் கிருமிகள் பெரும்பான்மையு மிரா. வெய்யிற் படுவதினால் எல்லா நுண் கிருமிகளும் இறந்துவிடக்கூடும். நல்ல காற்றும் வெய்யிலும் கிருமிகளைக் கொல்வதற்கு அநுகூலமாகும். ஆகையால், வீட்டிற்குள்ளே நல்ல காற்று வீசும்படியாயும் வெளிச்ச மிருக்கும்படியாயும் சன்னல்களைத் திறந்துவைத்தல் வேண்டும்.

ஏன் அசுத்த பதார்த்தங்கள் அபாயத்திற் கிடமானவை.

நுண்ணிய கிருமிகள் அசுத்தமான, அழுகிப்போகும் பதார்த்தங்களிலும், எருக்குப்பைகளிலுமே உற்பத்தியாகின்றனவென்று சாதாரணமாக நினைக்கப்படுகின்றது. இவ்வாறு நினைப்பது தவறாகும். மேற்சொன்ன பதார்த்தங்களில் அவை பலமுறையுங் காணப்படுகின்றன அல்லாமல் அவற்றிலிருந்தே உண்டாகின்றன வல்ல. அசுத்த பதார்த்தங்களில் சாதாரணமாக மிதமான சூடும் ஈரமும் இருக்கிறதினாலே அவற்றில் நுண்ணிய கிருமிகள் சேருமானால் அவை மிக விரைவாகப் பெருகி நீண்டகாலம் அவற்றுள் தங்கியிருக்கக் கூடும். நமது வீடுகளிலும், வீட்டைச்சுற்றியும், வீதிகளிலுங் குப்பைகளைச் சேர்த்து வைப்பது அபாயத்திற் கிடமாகும். ஏனெனில், வியாதியை உண்டுபண்ணக்கூடிய நுண் கிருமிகள் அக்குப்பைகளில் வளர்ந்து பெருகி நம்முடைய உடம்புகளுக்குள்ளே புகுந்து நோயை உண்டாக்குவதற்குக் காரணமாகின்றன.

(இன்னும் வரும்)

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

(ஸ்ரீமாந் வ. சு. செங்கல்வாராய பிள்ளை, எம். ஏ.)

ஏயர்கோன் கலிக்காமருடன் உறவு.

(442-ம் பக்கம் தொடர்ச்சி.)

அங்ஙனம் வாழுநாளில், காவிரியின் வடகரையிற் பெருமங்கலம் என்னுந் தலத்திற் சோழராஜனது சேனுபதியின் வருக்கத்திற் பொலிவுற்றுச் சிவபத்தியிற் சிறந்த **கலிக்காமர்** என்பவர் ஆரூரர் சிவபிரானை இங்ஙனம் ஒரு தையலிடம் அஞ்சாது தூதனுப்பிய விடயத்தைக் கேள்வியுற்று மெய்ந்நடுங்கி, ஆ! ஆ! கொடிது! கொடிது! அடிமையா நாதனைத் தூதாக அனுப்புவது! நன்று! நன்று! இச்செய்தியைக் கேட்டும் என் ஆவி ஒழிய இல்லையே! ஐயகோ! ஒரு பெண்ணின் பொருட்டா இறைவனை இரவெல்லாம் ஆட்டிவைப்பது! அடியவர் துயரைத் தரியாது இறைவன் தூதுசெல்ல இசைந்தாலும் உண்மை அடிமை அங்ஙனம் ஏவத் துணியுமோ? ஏவுதல் அழகோ! அப்படித் தூது விட்டவனை யான் கண்டால் என்ன செய்வனே எனக்கே தெரியாது" எனப் பலவாறு பேசி ஏங்கினர். இங்ஙனம் ஏயர்கோன் கலிக்காமர் தம்மீது செற்றங்கொண்ட செய்தி ஆரூரருக்கு எட்டிற்று. தாம் தூதனுப்பினது பிழையென் றுடன்பட்டு அதற்குத் தீர்வு வேண்டிச் சிவபிரானிடம் விண்ணப்பஞ் செய்தனர். இறைவரும் இவர்கள் இருவருக்கும் நட்பு உண்டாக்கக் கருதி ஏயர்கோன் கலிக்காமருக்குச் சூலைநோய் உண்டுபண்ணினர். அந்நோய் தீக்கொளிப்புக்கும் வேலாயுதங் குடைவதுபோல வருத்தக் கலிக்காமர் "ஈசா! நீயே கதி" என இறைவனை வேண்ட, இறைவனும் "வன்றொண்டன் தீர்த்தாலன்றி இந்நோய் தீராது" என மொழிந்தனர். அதற்குக் கலிக்காமர் "தம்பிரானே! உமது வழி வழி யடிமையாகவந்த குலத்திற்பிறந்த என்னை வருத்தும் இசசூலையைத் தீர்ப்பதற்குப் புதிதாக வம்பில் ஆட்கொள்ளப்பட்ட வன்றொண்டன் வருவதைவிட இந்

நோய் தீராது வருந்துவதே நன்று'' உமது திருக்கூத்தின் பெருமையை உணர்ந்தார் யாவர்? உமது வன்றொண்ட ரையே பெருமைபடுத்தும்'' என்றனர். இறைவனும் ஞரே லென மறைந்தனர். மறைந்தவர் வன்றொண்டர் முன் னர்த்தோன்றி "நம் ஏவலால் ஏயர்கோனுக்கு உற்ற சூலை நோயை நீ சென்று தீர்ப்பாயாக'' எனத் திருவாய் மலர்ந் தருளினர். ஆரூரரும் நன்றெனக்கூறி மகிழ்ந்து போற்றி வணங்கினர். இறைவனும் மறைந்தனர். ஆரூரர் இறை வன் திருவருளைத் தலைமேற்கொண்டு உடனே திருவாரூர் நீங்கிச் சூலைநோயைத் தாம் தீர்க்கவரும் சேதியைக் கலிக் காமருக்கு முன்னதாகச் சொல்லி யனுப்பினர். நோயின் கொடுமை ஒருபால்; அது தீரும்வழி ஆரூரரால் என்று இறைவனே சொல்லக் கேட்டதுன்பம் ஒருபால்; வன் றொண்டர் அவ்வாறே வருகின்றார் எனுமொழியைக் கேட்ட வருத்தம் ஒருபால்—ஆகக் கலிக்காமர் பெரிதும் மன முளைந்து மற்றவன் இங்குவந்து சேருமுன் இந்நோயை என்வயிற்றினோடும் கிழித்துத் தொலைக்கின்றேன் பார் எனக் கூறித் தமது உடைவாளை ஓச்சி வயிற்றிற் குத்த, உயிரும் மாய்ந்தது, சூலையுந் தீர்ந்தது. கலிக்காமருடைய மனைவி இதைக்கண்டு தானும் மாய்வதே கருமமெனத் துணியுஞ் சமயத்து நம்பியாரூரர் வந்துவிட்டார் எனக் கூறக்கேட்டு யாரும் அழக்கூடாது என எல்லாரையும் அடக்கிவிட்டுப் பின்னர்த் தனது கணவர் செய்கையை மறைத்து நம்பியை முக மலர்ச்சியுடன் எதிர்கொள்ளுங் கள் எனக்கூற மனையிலுள்ளர் அவ்வாறே அஷ்ட மங்கலங் களுடன் நம்பியை வரவேற்று உபசாரங்கள் செய்ப நம்பி யும் இஃதிருக்கட்டும், யான் கலிக்காமரைக் காணவேண்டும். அவர் நோயைத்தீர்த்து அவருடனிருப்ப யான் மிக்க அவா வுள்ளவனுயிருக்கிறேன்; அவர் எங்குற்றுர் என வினவி னர். அங்கிருந்தோரும் "ஒன்றும் கெடுதியில்லை; அவர் உள்ளே பள்ளிகொண்டுள்ளார்'' எனக்கூறினர். "கெடுதி யில்லையாயினும் என் மனம் அமைதி கொள்ளவில்லை; ஆத லால் யான் அவரைக்காண வேண்டும்'' என ஆரூரர் உரைத் தருளினர். இதைக் கேட்டவர்கள் ஆரூரரை அழைத்துப் போய் "அதோ; உள்ளார்'' எனக் காட்ட, வாளும் சோரியுமாகக் கிடக்குங் காட்சியைக்கண்டு, நடந்த வரலாறு

இன்னதெனத் தேர்ந்து "அந்தோ! பாபம்! இவர் முன்பு யானும் போவேன்" எனக்கூறிக் குற்றுடைவாளைப்பற்ற, இறந்துகிடந்த ஏயர்கோன் இறைவன் திருவருளால் உயிர் பெற்று நம்பிபால் நட்புள்ளவராய் "ஆ! கெட்டேன்!" எனக்கூறி விரைந்தெழுந்து ஆரூராரின் கைவாளைப் பிடித்துக் கொள்ள, ஆரூரர் அவர் பாதத்தில் வணங்கி வீழ்ந்தார். ஏயர்கோன் அவ்வாளைப் புறத்துவைத்து தாமும் ஆரூரர் தாளில் பணிந்து வீழ்ந்தனர். இவ்வதிசயங்கண்டு வானோர் மலர்மாரி பொழிந்தனர். பின்னர் இருவரும் மனமுவந்த நட்பினராய்த் திருப்புன்கூர் என்னும் தலத்துக்குச் சென்றனர். அங்கு, ஆரூரர் "அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத" எனத் துவக்கும் 55-ஆவது திருப்பதிகத்தில்,

"ஏத நன்னில மீரறு வேலி
யேயர்கோ னுற்ற விருமபிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக
கோல வெண்மணற் சிவன் றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்த தண்டிக்குன்
சடைமிசை மல ரருள் செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன்
செழும் பொழிற்றிருப் புன்கூரு ளானே."

என்னும் திருப்பாட்டில் கலிக்காம நாயனருக்கு இறைவன் அருளிய திறத்தை எடுத்தோதினர். பின்னர் ஏயர்கோன் திருவாரூர் வந்து நம்பியுடன் சின்னாள் இருந்து தமது ஊருக்கு விடைபெற்றுச் சென்றனர். நிற்க,

சேரமான் பெருமாளுடன் தோழமை கொண்டது.

அக்காலத்துச் சேர நாட்டரசன் "சேரமான் பெருமாள்" என்பவர். அவர் சிவபத்தியிற் சிறந்தவர். அவரது பூஜை முடிவில் நடராஜப்பெருமான் தமது திருவடிச் சிலம்பொலியை அவர்கேட்க நித்தம் இசைப்பித்தல் வழக்கம். ஒருநாள் பூஜை முடிவிற் சிலம்பொலி கேளா தொழியச் சேரர் பெருமான் மதிமயங்கி "அந்தோ! எனது பூஜையில் யாது பிழை இயற்றினனே" என வருந்தி உடைவாளை உருவித் தமது மார்பில் நாட்டச் சிவபிரான் விரைந்து திருச்சிலம்போசை மிகவும் இசைப்பித்தார். உடனே, உடைவாளை அகற்றி, "ஈசா! ஏனோ முதலில்

ஒலியைக் காட்டாதொழிந்தது. திருவருள் புரிதல்வேண்டும்'' எனச் சேரமான் இரங்கிக்கேட்க, இறைவனும், "அச்சமயத்துத் தில்லையில் நமது கூத்தாடலைக் கண்டு வணங்கி வன்றொண்டன் பதிகம் பாடிக்கொண்டிருந்தான். அதைக் கேட்டிருந்தமையால் தாமதித்தது'' என அசரீரியாய் உரைத்தருளினர். அத்தகைப் பெருமைவாய்ந்த வன்றொண்டரைத் தரிசனஞ் செய்வேன் எனச் சேரமான் பெருமாள் தமது சேனைகள்சூழ நல்ல நாளிற் புறப்பட்டு வழியெலாங் கடந்து பொன்னி நாடடைந்து தில்லைமா நகரம் வந்துசேர்ந்து உச்சிக்கூப்பிய கையினராய்த் திருக்கோயிலுட் சென்று நடராஜப் பெருமானை வணங்கிப் "போன் வண்ணத்தந்தாதி'' என்னும் பாமாலையைச் சூட்டினர்.

(இன்னும் வரும்.)

தியாகிகளின் உதிரமின்றி சுதந்தரக் கோயில் கட்ட முடியாது. 'எங்கே துன்பம் இருக்கின்றதோ, அங்கே பேரின்ப வீடிருக்கின்றது':

ஆஸ்கார் ஒயில்ட்.

சத்தியாக்கிரகம் (சாத்வீக எதிர்ப்பு) மனித கஷ்டங்களைப் போக்குவதற்குச் சிறந்த கைக்கோல்:

வீக்டர் ஹிகோ.

ஒரு மனிதன் மனிதர்களால் செய்யப்பட்ட சட்டங்களை அனுசரித்து நடப்பதை விட, தன் மனச்சாட்சிக்குட்பட்டு முதல் முதல் நடக்கவேண்டும்:

தோரி.

அடிமையை ஒழித்து சுதந்தர மடைவதே மனித வாழ்வின் லட்சியம்:

கீதை.

அநேக கோடி யுகம் உலகில் வாழ்ந்து வாழ்க்கையின் சுலபமான அமிர்தரஸத்தைப் பருகி சுகத்தைக் கொடுக்கக் கூடிய நல்ல செய்கைகளைச் செய்து கொண்டு நமது பாரதத்தில் வாழ்வோம்:

ஸ்ரீதா பட்டகர்.

நங்கையின் நிருபம்

ஸ்ரீமாந் தி. ரா. ஸ்ரீநிவாசன் எழுதியது.

ஆருயிரனைய தங்கை பத்மாசனிக்கு பாகசாதனி தேரூர்ந்தான் தண்ணருளால் சகல சௌபாக்கியங்களும் உண்டாவதாக! உபய குசலோபரி. யான் நினக்கு ஏற்கனவே அறிவித்திருந்தவாறு, அங்கனைகளின் மேம்பாடான வாழ்க்கை நிலையை எனக்குத் தெரிந்த வரை இந் நிருப மூலம் எழுதலானேன். இவைகள் யாவும் மேதையரா கிய நம்மூதாதையர் நாரீமணிகளின் பொருட்டுக் காருண்ய சிந்தை யோடு வெளியிட்ட முறைகளாகும். சுலப சாத்தியமான இத் திட்டங்களை மேற்கொண்டொழுகி தருணிகளிற் சிறந்தவளாயும், "பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை"யாயும், மங்கையர் உலகினுக்கே உயரிய உதாரணையாயும் விளங்கி பேறு யாவும் உற்று இன்புறு வாழ்வு துய்க்குமாறு எல்லாம் வல்ல பரஞ்சோதியாகிய கருணை வள்ளல் அருள்புரிய வேண்டி அவனிணைக் கமலம் போற்று கின்றேன். இல் வாழ்க்கைக் கின்றியமையாத முறைகளை இனி விவரிக்கின்றேன்.

குலமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதலேயாம். கொண் டானிற் சிறந்த கோ இல்லை யென்றே சான்றோர் வகுத்தருளினர். இதனையே தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் "தெய்வந் தொழா அள் கொழுநற்றொழு தெழுவாள்......" என்பதால் வற்புறுத்தினார். ஆகவே, நீ நின் கணவனைத் தவிர வேறொரு தெய்வ மிருப்பதாய்க் கருதவேண்டா. உன் நாயகனே உனக்குரிய தெய்வம். அவனே தாய், தந்தை, மற்று முள்ள சுற்றமும். அவனுக்கு இயற்றும் கடமைகளே தேவபூசை. ஆதலின், உன் காதலை அந்தரங்கமாக விசுவாசித்து கடவுளிடத்திற் போல் அவனிடத்தில் அனுகூலையாய் இருந்து கொண்டு அவனிஷ்டப்படி நடந்து கொள்ளலே நீ ஆற்ற லாகும் சீரிய தொண்டாம். வீட்டின் காரியங்களனைத்தையும் சரிவரச் செய்து முடிப்பதில் சமர்த்தையாயும், பர்த்தாவிடத்தும் அவனுற்றார்பாலும் பிரியமாயும் இருக்கக் கடவை. உனது கேள்வன் நல்லொழுக்கம், அறிவு, அழகு, செல்வம் இவைகள் இல்லாதவனா யிருப்பினும், 'கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருடன்' என்பதை ஓர்ந்து அவனுக்கு உற்ற துணையா யிருப்பையாக. "......கூற்றமே, இல்லிற் கிசைந் தொழுகாப் பெண்" எனவும், "உடன்பாடிலாத மனைவி தோழிலின்னா" என்றும் நூல்கள் கூறு தல் காண்க. "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்." ஆகவே, நீ "மனைத்தக்க மாண்புடையளாய்" இருக் வேண்டு மென்பதைச் செவ்வனே மன மிருத்திக்கொள்.

அனுதினம், அதிகாலையில் கணவன் விழித் தெழுதற்கு முன்னெழும் பேதையாய் இருக்க முயல். எழுந்ததும் மனந் தெளிவாய் தெய்வந் தொழற்குரியதாய் இருக்குமாதலின், நினது தெய்வமாகிய பர்த்தாவை வணங்கி எழு. பின்பு, வீட்டை பசுஞ்சாணங் கொண்டு மழமழ வென்றும், சுத்தமாய் மனோகரமாய் இருக்குமாறு மெழுகிப் பெருக்கி, அரிசிமாவிலான மென் கோலமிட்டு பார்வைக்கு ரமணீய மாய் வைத்துக் கொள். நீ கர்வமும், செல்வச் செருக்கு மின்றி உன்னால் செய்யலான காரியங்கள் அனைத்தும் செய். இவ்வாறு செய்தலால், நினது இல்லம் இலக்குமி வாசம் செய்வதற்கு உகந்ததா கின்றது. பிறகு, நறுமஞ்சள் அரைத்துக் குளித்து சுத்தையாய் சமையல் பாத்திரங்களை நன்றாய்த் துலக்கி அடுப்பை மண், சாணம் முதலியன கொண்டு மெழுகு. உனது நெற்றியைப் பாழடைந்து போக விடாதே. திலக மேனும், அல்லது ஸ்ரீசூர்ண மேனும் இட்டுக் கொண்டு, நினது கையினால் பக்குவம் செய்யப் பட்ட அறுசுவை உண்டியை பர்த்தாவுக்கு அன்புடன் இட்டு அவனைக் காலாகாலத்தில் ஜீவன நிமித்தம் செய்யும் தொழிலுக்கு அனுப்பி வை. வேலைக் காரர்கள் பலர் ஏவல் புரிய இருந்திடினும் இச்சீரிய தொண்டை நீயே ஏற்று உன் காதலனைக் களிப்பிப்பா யாக.

பெண்டிர்க் கழகு எதிர் பேசாதிருத்தலாகும். கணவன் எக்காரியத்தைச் செய்யச் சொன்னாலும் நீ அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்து அவைகளைப் புரிய வேண்டும். குடும்ப காரியங்களைக் கணவன் விருப்பப் படிக்கே செய்ய வேண்டும். ஸ்திரீகள் எப்பொழுதும் சுயாதீனம் கொண்டாடக் கூடாதாதலால், அற்பமான காரியத்தைக் கூட பர்த்தா, மாமியார், இன்னோருடைய அனுமதி பெற்றே செய்ய முற்படு. நினது புருடனது இல்லை லக்ஷ்மி கடாட்சத்திற் கேற்றவாறு செய்ய நின்னாலேயே முடியும். ஆகவே இல்லாளாகிய நீ விருந்தோம்பல், மனைவாழ்க்கைக் காவன கணவனிடம் கூறிப் பெற்று அவைகளை செவ்வனே காப்பாற்றி சீருஞ் செட்டுமாய்க் குடித்தனம் செய்தல், நற்குண நற்செய்கை பூணல் ஆகிய இவைகளில் தேர்ச்சி யுடையவளாய் விளங்க வேண்டுவது 'மனைமாட்சி'க்கு அத்தியாவசிய மாகும்.

மணவினை நடந்தேறியது முதற் கொண்டு கணவனது பெற்றோரும் உற்றோருமே நினது தாய், தந்தை, மற்று முள்ள சுற்றத்தாராவர். ஆகவே நீ அவர்களது குணாதிசயங்களை ஐயம், திரிபு முதலியன வின்றிச் செவ்வனே உணர்ந்து அவற்றிற் கேற்க நடந்து அவர்களை மகிழ்வித்து 'நல்ல பெண்; குலத்தை விளங்க வைத்த கோமளாங்கி' என்ற புகழ் மொழிகளை அன்னாரிடமிருந்து பெற முயற்சிக்க வேண்டும். கணவனிடத்து பக்தியும், கபட மின்மையும், மாமியார், மாமனார்களிடத்து அளவிறந்த அன்பும், வணக்கமும், ஓர்ப்படிகளிடத்து சகோதர பாவமும், பந்துக்களிடத்து சிநேகமும், வேலைக்காரரிடத்து தாட்சண்யமும், கணவனது மித்திரர்களிடத்தில்

பரிவும், கீழ்ப்படிதலும், பெரியோர்களனைவரிடமும் கௌரவமும், தீமையே செய்தார்க்கும் நன்மை செய்தலும், சகிப்புத்தன்மை (பொறுமை)யும் ஆகிய இவை உன்னிடம் அமையவேண்டும். உனது முகம் அலர்ந்து புன்னகை மிளிர்ந்து "லக்ஷ்மி" தேவிக்கு உறைவிடமா யிருக்கட்டும்.

புருடனுக்குப் பிரியமான வஸ்துக்கள் உனக்கும் உகந்ததா யிருக்கட்டும். எவை அவனுக்கு வெறுப்போ அவைகள் உனக்கும் அவ்வாறே இருக்குமாறு செய்து கொள். "தாய்க்குப் பின் தாரம்" என்றபடி கணவனுடைய தேக நிலைக்கும் பிரியத்திற்கும் ஏற்ப தீஞ்சுவை உண்டிகளை உதவி, தாயினது போஷிப்புக்கும் மேலாக அவனை நீ பாது காத்து அவனது சரீர சௌக்கியத்திலேயே நோக்கமாயிரு. அவன் உண்டு குடும்பப் பாதுகாப்புக் கான வேலை நிமித்தம் வெளிச் சென்ற பின்பு மாமியார், மாமனார், கிளைஞர் இவர்களை உண்பிக்கச் செய்து பின்னர் நீ உண்டி கொள்ளலை மேற்கொள்ளுவாயாக. உனது குழந்தைகளுக்கும் நீ அயிலும் முன்பே உணவு அளித்துவிடு. கணவனது இலையிலேயே நீ சாப்பிட வேண்டுவது அத்தியா வசியம். இது நம் முன்னோர்கள் சாஸ்திரரீதியாகவும், சரீரவியல் விதிகளுக்கு ஏற்கவும் விதித்துள்ள ஓர் முறையாம். பர்த்தாவினுடைய உச்சிஷ்டத்தை அங்கனமணிகள் விரும்பிப் புசிக்க வேண்டும். ஏனெனில் அது கற்புடைய ஸ்திரீக்கு கடவுள் அமுது செய்த பிரசாத மாகும். அன்றியும் கணவன் உபயோகித்த வெற்றிலை, சந்தனம், புஷ்பம் இவைகளையும் நீ மனமுவந்து ஏற்றுக் கொள்ளுவா யாக.

கணவன் வேலை நிமித்தம் வெளிச் சென்றிருந்தவன், களைத்துப் போய் வீடு திரும்பும் தறுவாயில், நீ வீட்டிலிருந்து புன்னகை தவழ்ந்த ஆனனத்துடன் வரவேற்று உபசரித்து அவனது சிரமம் நீங்கும் வரையில் அவனுக்கு இதமான பணிவிடைகள் செய். உனது தீங்குரலால் இதமான சம்பாஷணைகளைச் செய்து அவனது சோர்வு நீங்கச் செய். பின்பு, சாவதானமா யிருக்கும் வேளையில் குடும்ப விஷயமாக வுள்ளவைகளையோ, அல்லது நீ ஏற்கனவே கேட்க வேண்டு மென்று இருந்த வற்றையோ கேள். இவ்வாறு செய்வையேல் உனது வேண்டு கோள் நிறைவேற்றப் பெறுவதுந் தவிர, உன்பால் கணவனுக்கு அதிகமான பிரேமையும், ஆர்வமும் உண்டாம். இவ்வாறின்றி, அவன் வெளியி லிருந்து இளைப்புடன் வீடு வரும் காலத்து வீட்டிலிருந்து உபசரியாமல் கதவைப் பூட்டிக் கொண்டு பக்கத்து வீட்டுக்கேனும், அல்லது வேறு எங்காவது போயிருந்தால், அவனுக்கு உன் மேல் கோபமும், வெறுப்பும், சங்கையும் தோன்றும். ஆகவே இத்தகைய ஒழுக்கங்களை அறவே நீக்குவாயாக. அவனை உபசரிப்பதில் அதிக நாணத்தையும், வெட்கமே சிறிது மில்லாத அசட்டுத் தைரியத்தையும் மேற் கொண்டு ஒழுகாதே. அவன் வீடு சேருஞ் சமயத்து பலகணிசமீபம், மேன்மாடி, முன்

வாயில் ஆகிய இவ்விடங்களில்—பலரும் பார்க்கத்தக்க இந்த இடங்களில்—கணவன் காணுமாறு நிற்காதே.

எப்பொழுதும் உன்மேல் உனது புருடனுக்கு வெறுப்பு கோபம் இவைகள் உண்டாக இடம் வைத்துக் கொள்ளாதே. இதன் பொருட்டு அவன் மனோபாவத்தை நீ செவ்வனே கற்றுத் தெளிந்து அதன்படி நடந்து கொள். ஒரு வேளை, உன் மீது யாதொரு தவறும் இல்லா திருக்கையிலும் உன் பர்த்தா கோபித்துக் கொள்ளலாம். அப்பொழுது அவ்விகழ்வான சொற்கள் உன் மனத்தை தீபோற் சுடுமாயினும், பிரதியாக முகம் கடுகடுத்து வெடுவெடுப்பாய்ப் பேசாமல், அலர்ந்தமுகம், தண்நோக்கு, வணக்கம், நேர்மை, உண்மை, இதம், அன்பு இவற்றோடு கூடிய இன்சொற்களால் அவனது முனிவும், முறுவலாக மாறு மாறு சொந்தம் பாராட்டி அவனைச் சரிப்படுத்த முயல். காரணம் பற்றி அவன் முனிவனேல் மறுமுறை முதல் உன்னைச் சரியாய்த் திருத்திக் கொள். அப்படியல்லாமல், கணவன் பேரில் ஏற்பட்ட கோபத்தை அவனுக்கு எதிரிலேயோ, நண்பர் முன்னிலையிலேயோ, குழந்தைகளை அடிப்பதாலோ, வீட்டுக் கலங்களை திடீர், திடீர் என்று வைத்தலாலோ அன்றி அவைகளைக் கீழே போடுதலாலோ வெளிக்காட்டக் கூடாது. இவ்வாறெல்லாம் செய்தலால், உன்மீது வெறுப்பு மிகக் காரணமே ஏற்படும். ஆகவே இவைகளையொழித்து பொறுமையுடனிருந்து, நீயும் உன் நாயகனும் தனித்திருக்கையில் உனது வருத்தத்தையும், தாய், தந்தை, சுற்றம் யாவும் ஆன அவனே இவ்வளவு தன்னைக் கோபித்தால் தனக்கு வேறு புகலிடம் எங்கு உள்ளது என்பதையும் தெளிவாக எடுத்துச் சொல்லி அவன் இனியும் தன்னைக் கோபியா தொழியுமாறும், தானும் சீர்திருத்த முறுவதாகவும் வணங்கிக் கேட்டுக் கொள். இவ்வாறு செய்யும் பெண்மணியை எத்தகை ஆடவனும் கோபிக்கவே மாட்டான் என்பது திண்ணம். அன்றியும் 'அடிப்பது ஒரு கை; அணைப்பது ஒரு கை' என்பதையும் நன்றாய் மனதிருத்திக் கொண்டு பொறுமையே பூஷணமாய் பர்த்தாவுக்கு ஆவன செய்.

கணவன் தனது கல்வித் திறமையைத் தானே புகழ்ந்து கொண்ட விடத்தும், அவைகளுக்குச் செவி கொடுத்துக் கேட்பதுமன்றி, அவனது அறிவுக்காக அவனை நீ கொண்டாடி அவ்வாறும் அவனது அன்பைப் பெற்றுக் கொள். கேள்வன் யாதாவது காரியஞ் சொன்னால் அதை உடனே செய்ய வேண்டுமே யல்லாது, எதற்காக, ஏன், என்பதாகப் பலவாறு கேள்விகள் கேட்கக் கூடாது. அவன் விரும்பியவா றெல்லாம் செய்தலே பார்யையின் கடமையாகும். கணவன் ஏவும் காரியங்களைச் சிரத்தை யோடும் மனப்பூர்வமாய் அன்புடனும் செய்ய வேண்டும். கணவன் உத்தரவின்றி குடும்ப காரியங்களைத் தவிர வேறெதையும் செய்யக் கூடாது. உதாரணமாக, நகை முதலியன வாங்குவ தானாலும், விக்கிரயம் புரி

வதாஞலும் கணவன் அறியாமல் தானே சுயாதீனமாய் ஒன்றும் செய்யக் கூடாது.

உனது கேள்வன் தொழில் நிமித்தம் வெளிச்சென்ற பின்பு அவனது பெற்றோர் உற்றோர் முதலிய யாவரையும் உபசரித்து அவர்களைத் திருப்தி செய்வி. பிறகு நீ உண்டி கொண்டு, சமையல் பாத்திரங்களைச் சுத்தி செய்து அவைகளை அவற்றிற்கென ஏற்பட்ட இடங்களில் செவ்வனே வைத்துவிடு. இவ்வாறே குடும்ப சாமான்கள் யாவற்றினும் உனது கருத்து இருக்கவேண்டும். தூசி, பூச்சி, எலி முதலியன நெருங்காமலும், குழந்தைகள் எடுக்கக் கூடாவாறும் தகுதியான இடங்களில் வீட்டுப் பண்டங்களைக் காப்பாற்ற வேண்டும். மூடவேண்டிய சாமான்களை மூடாமலும், சையாளாமல் பாத்திரங்களை களிம்பு ஏறும்படிக்கும், துருப்பிடிக்குமாறும் விட்டு வைக்கக் கூடாது. பானை முதலிய மண்பாண்டங்களையும், மூங்கில், பிரம்பு இவற்றாலான கூடை முதலியனவும், மரத்தாலான பெட்டி முதலியவற்றையும், குடம் முசலான உலோக பாண்டங்களையும் உபயோகமாயும், மலிவாயு மிருக்கிற காலத்து நீ வாங்குவாயாக. இவ்வாறு வாங்கியவை உன் கணவன் மனதுக்குப் பிரியமாயிருக்குமா என்பதையும் உய்த்துணர்ந்து கொள். முன்ஞலோசனை யின்றி எப்பொழுதும் எக் காரியத்தையும் செய்யாதே. குடும்ப வேலைகள் யாவும் முடிந்தபின்பு பகற் காலங்களில் ஓய்வா யிருக்கும்போது அண்டை அயல் வீடுகளிலுள்ள மாதர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு ஊர் வம்பு பேசுதல், தாயம், சொக்கட்டான், பல்லாங்குழி முதலிய ஆடுதல் இவைகளில் சலந்து வீணே காலத்தைக் கழிக்காமல், அந் நேரத்தை நல்ல பிரபந்தங்களை வாசித்தறிவதிலும், சன்மார்க்க சிந்தனையிலும், குழந்தைகளுக்குத் தாய்மொழி, தேச பக்தி ஊட்டக் கூடிய சிறுகதைகள், நற்குணங்கள் ஆகிய இவைகளைக் கற்பித்துப் பயிற்றுவதிலும், கை ராட்டினத்தில் நூல் நூற்றல் ஆகிய இவைகளிலும் செலவிடு. ஆடல், பாடல், நடனசாலை இவைகளைக் கனவிலும் நினைக்காதே. உன் சினேகிதிகள் இவைகளைப் பற்றிப் பிரஸ்தாபம் செய்யக் கூட இடங் கொடாதே. இவ்வொழிவு காலத்தில் உனது பர்த்தாவின் அல்லது குழந்தைகளின் ஆடைகள் ஏதேனும் கிழிந்து இருப்பின் அவைகளைத் தைத்து வைத்துவிடல் நலம். அன்றியும், தலையை நன்ருய் வாரி முடியிட்டோ அல்லது பின்னிக்கொண்டோ, நெற்றியை நன்ருய் அலம்பிக் குங்குமமோ அல்லது சாந்துப் பொட்டோ இட்டுக்கொண்டு உன்னைத் திருத்திக் கொள்.

(இன்னும் வரும்.)

இந்தியத் தாய்
தன் மக்கட்கு உரைப்பது

ஸ்ரீமாந் ஆர். வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் எழுதியது.

சந்தப் பாட்டுகள்.

வானின் இடம் அற மேவி மறைதரு
மாய இருளதை ஒருசேர
மாந்தி எழுபகல் வேந்தின் ஒளிதரு
காந்தி எழுந்தது எழுவீரே!
ஞானம் அதனெடு மேனி அருளிய
நாதன் இணையடி தொழுவீரே!
ஞாயி றெழுதரு காலை உமது நல்
தாயின் நலஞ்சிறி தறிவீரே!
எணி இதுதனல் வானின் அடைதரல்
ஆகும் எனும்இம் மலைபாரீர்!
எய குணகுட பாலோ டழகுதென்
நாடும் வளைதரு கடல்பாரீர்!
ஆன இவை அரண் ஆக உடையுநும்
தாயை நிகர்வதோர் திருநாடு
ஆகும் அவனிஎப் பாலும் உளதெனில்
ஆய அதனைநீர் அறைவீரே!
பாயும் ஒலியுடை நீரின் வீழ்வு தென்
காலின் இனிதுறு மலைபாரீர்!
பாலில் நறுநெயில் தேனில் மிகுசுவை
பாயுந் தமிழ் முதல் மொழிபாரீர்!
தூய கங்கையுந் தாய்கோ தாவிரி
தோமில் காவிரி யதனோடு
தூவு பொருனைமுன் னய நதிபல
பாயும் நிலவளம் அதுபாரீர்!

இந்தியத்தாய் தன் மக்கட்கு உரைப்பது

மேய வெள்ளிபொன் னேடி ரும்புமண்
ஊடு சரிமுதற் புதைபாரீர்!

மேவு பலவகை கானின் வளமொடு
வேலை தருவளம் பலபாரீர்!

ஆய மகவினர் வாழ்வு தனக்குள
தாகு பொருளினில் எதுதானே

ஆகும் எனதிடை நாடின் இலதென
தேடி மொழிகுவீர் மகவீரே!

மேலை யதனிலோர் காலம் உயருவே
ளாளர் குடியென நுவல்வோர்கள்

வோராய் உலகினுக் காவி பொருள் உடல்
ஈயும் அருமையார் பலகோடி!

வேலை மரக்கல னேடு தரையினில்
மேவு வழியெலாம் பொருள் தேடி

வேண திருவெலாம் நாளும் நிறைதர
மேய வணிகர்கள் பலகோடி!

காணும் அவரெனை வீர நலமுள
தாயர் தாமுமே ஒருகோடி!

ஞால மிசையறி யாமை குடிகொளு
நாளும் இதனிடை கலைசூடி

நாடு புலவர்கள் கோடிபல! இனி
நாட லுறுவன சிலகேளீர்!

வேறு வேறெனும் சாதி மாமத
வேலை மேவினும் இடைமேவும்

வேறுபாடறத் தாயர் இந்தியத்
தேவி யாம்என உணர்வீரே!

ஆரும் ஆங்கில ராக வனையர்
ஆக யாவரே அவரேனும்

ஆய என்னிடைத் தாயின் அன்பது
மேவுவோர்க்ள் என் மகவாரே!

ஓரும் ஓரிடம் மேவியோர்கள் ஓர்
தாயர் சேயென இணையாரேல்

ஓதும் ஞாலமெப் பேறு மேவவோர்
காலு மில்லையென் றறிவீரே!

பாரில் யாவரும் தாயர் நாடது
பீடு மேவுற படுபாடு

பார்மின்! பார்மினே! பாலர்காள் நீவீர்
வாழ்விர்! வாழ்விர்கள் பலவூழி!

நாளும் எய்தரு ஊணும் ஆடையும்
நாடித் தாய் நலம் நினையீரேல்

நாடு யாவும்நும் பீடில் ஏழைமை
காண காணம தடையீரோ?

சூழுங் கோழையுஞ் சோர்வும் பேதமும்
சூதும் யாவையும் விடுவீரே!

தூய கைத்தொழி லோடு தொன்முறை
யாய கல்வியை அடைவீரே!

ஆளும் ஆங்கிலர் வாழ்வு யாமுற
ஆகும் வாழ்வென அறிவீரே!

ஆய அன்னவர் நீடு செய்தன
பேரு தவிகள் மறவீரே!

நீள நீர்தனை வாழ்வும் ஆங்கிலர்
நேயமே தரப் பெறுவீரே!

நீடும் ஊழிகள் வாழி! வாழியர்
நேரிலாத வென் மகவோரே!

———

(திராவிடன்)

சந்தர்ப்பங்கள் வாய்க்கா விடில் நானே சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்ளுவேன் :— நெப்போலியன்.

நமது சீவிய காலத்திற்குள் சுதந்தரத்தைப் பார்க்க முடியாமற் போயினும் அதன் அஸ்திவாரத்தில் நமது எலும்புகளைப் போட்டு சுதந்தரமாகிய சுவரை எழுப்புவோம் :— மோத்திலால்.

அறியாக்காலத்தில் நம்பிச் செய்வதெல்லாம் பக்தி யென்றும் பிறகு அறிந்து செய்வதெல்லாம் ஞானமென்றும் சொல்வர் :—

மனிதவாழ்க்கையை அன்பு இல்லாமல் நடத்துதல் கஷ்டம் :—

கோழை இறப்பது பல முறை ; ஆனல் வீரன் இறப்பது ஒரு முறை :— ஷேக்ஸ்பியர்.

———

சப்பாத்துக் கள்ளி

அல்லது

நாகதாளியின் சில உபயோகங்கள்,

ஸ்ரீமாந் ஜே. செல்வரங்க ராஜு அவர்கள் எழுதியது.

இக்கள்ளியானது நமது தேசத்தில் பல பாகங்களிலும் படர்ந்து ஏராளமான நிலங்களை மூடிக்கொண்டிருப்பதால் இதைக் கிருஷிகர் அவர்களுக்குக் கெடுதியை உண்டாக்கும்பொருட்டு ஓர் சாபததினால் உண்டான பூண்டென்று எண்ணுகிறார்கள். சில இடங்களில் விவசாயத்துக்கு லாயக்கான நிலத்தில் இது பரவி மூடிக்கொண்டிருப்பதால் அந்நிலங்கள் கிருஷிக்கு உபயோகமற்றதாய் தற்காலத்தில் ஆய்விட்டன. அனேக கிராமங்களுக்குச் சமீபமாயுள்ள குத்துச்செடிகள் வளரும் குறுங்காடுகளில் இச்செடிகளுக்கு ஊடேயிருக்கும் காலி நிலங்களில் ஜனங்களுக்குப் பிரயோஜனப்படக்கூடிய புல், பூண்டு, செடிகள் முதலியவைகளும் அக்காலி இடங்களில் மூலைக்காவண்ணமாய் இது வளர்ந்து மூடிக்கொண்டிருப்பதால் அவ்விடங்கள் உபகாரப் படாம லிருக்கின்றன. அநேக கிராமங்களில் வழிபாட்டைகளுக்குச் சமீபமாய் இது படர்ந்து வருஷா வருஷம் ஜாஸ்தியாகிக்கொண்டு வருவதால் இப்பாட்டைகளும் வழிகளும் அநேகமாய் விஸ்தீர்ணத்தில் குறுகிக்கொண்டே வருகின்றன. புறம்போக்கு நிலங்களில் இவைகள் ஏராளமாய் வளர்ந்து மூடிக்கொள்வதால் அந்நிலங்கள் எந்தவேலைக்கும் பிரையோஜனமற்றுப் போகிறது. இந்நாகதாளிப் புதர்களுக்கு மறைவில் போய் ஜனங்கள் மல ஜலங்கள் கழிப்பதால் அவைகள் இதை ஜாஸ்தி வீரியமாய் வளரச் செய்வதோடு அக்கிராமத்திற்கு சுகாதாரக் குறைவும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் இந்த ராக்ஷஸப் பூண்டை கிராமாந்தரங்களிலிருந்து எப்படி நிர்மூலமாக்குவதென்று கிருஷிகர் ஆலோசனைசெய்து கவனிக்கவேண்டிய விஷயங்களில் ஒன்றாயிருக்கிறது. இங்குமங்கும் இவ்விராஜதானியில் சில இடங்களில் சில தாலூக்கா போர்ட்டார்களும், ஜில்லா போர்டார்களும் இப்பூண்டை நிர்மூலப்படுத்தப் பிரயத்தனங்கள் செய்து கொண்டிருந்தபோதிலும் எல்லாக்கிராமங்களிலும் விவசாயிகளும் இவ்விஷயத்தில் ஒத்தாசை செய்தாலொழிய இதை விசேஷமாய்த் தொலைக்க சாத்தியப்பட மாட்டாது.

கோயம்பத்தூர் ஜில்லாவின் சில பாகங்களில் இந்நாகதாளியை அப்புறப்படுத்தி மண்ணுடன் கலந்து மக்க வைத்து எருவுக்கு லாயக்காகும்படி செய்த பின், கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய பயிர்களுக்குப் புன் செய்களிலும், தோட்டக்கால் நிலங்களில் ராகி, மிளகாய், புகையிலை, கோதுமை, வாழை, கரும்பு முதலிய இறவைப் பயிர்களுக்கும் எருவாய் உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் எல்லாக் கிருஷிகரும் இம் முறையைக் கையாடுகிற தில்லை. கிருஷிகர் பயிரிடும்

நிலங்களுக்குள் மூலை முக்குகளில் இந்நாகதாளி வளர்ந்தாலும் அல்லது வெளியிலிருந்து தங்கள் நிலத்துக்குள் பரவி வந்துகொண்டிருப்பதாய் கவனிக்கும் சமயங்களில் தான் இதை அநேகமாய் அப்புறப்படுத்தி மண்ணுடன் மக்கவைத்து எருவாய் உபயோகிக்கின்றனர். சில கிருஷிகர் தங்களுடைய நிலங்களுக்குச் சமீபத்தில் சப்பாத்துக்கள்ளி ஏராளமாய் அகப்பட்டால் அதை வெட்டி எருவுக்கென்றே சேகரித்து மக்கவைக்கின்றார்கள். ஆனால் இந்த வழக்கம் அவ்வளவு தூரம் கையாடப் படவில்லை. என்றாலும் கிருஷிகர் தங்களுடைய நிலங்களைச் சீர் திருத்துவதற்காக நாகதாளிப் புதர்களுக்குக் கீழே படிந்திருக்கும் மண்ணை (களிமண்ணை) வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய் நிலங்களில் போடும் வழக்கத்தைக் கையாடுகிறார்கள். புறம்போக்குகளிலும், குளக்கரைகளிலுமுள்ள இம்மண்ணை அடித்துக்கொண்டு போகவேண்டிய இடம் அரை மைலுக்குள்ளிருக்குமாகில் நாகதாளிப் புதர்களை வெட்டி, அப்புறப் படுத்திவிட்டு, அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் மண்ணை வெட்டி அப்புறப்படுத்தி வண்டியில் ஏற்றிககொண்டு போவதற்கு வண்டி ஒன்றுக்கு அணு 2. தான் செலவாகும். இப்போது கூலியாட்களுக்கு கூலி அதிகரித்துக்கொண்டு வருவதால் ஒரு வண்டிக்குக் கூலி ஜாஸ்தியாகிக் கொண்டே வருகிறது. நாகதாளிப் புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் மண்ணானது நிரம்ப எருச்சத்துள்ளது என்றால் காற்றில் அடித்து வரும் இலை சருகு முதலியவைகளும் இந்திரிய வஸ்துக்கள் அடங்கிய பொருள்களும் காற்றினால் அடிபட்டுப் பதரினால் தடுக்கப்பட்டு இவைகளின் அடியில் மக்குவதனால் எருச்சத்து ஜாஸ்தியாகிறது. நாகதாளியிலேயே நூற்றுக்கு 60 பாகம் இந்திரிய வஸ்து இருக்கிறதென்று டாக்டர் லெதர் துரையவர்கள் ரசாயன பரீக்ஷைசெய்து கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்வளவு இந்திரிய சத்துள்ள நாகதாளியை அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் எருச்சத்துள்ள மண்ணுடன் சேர்த்து மக்கவைத்தால் அப்படி மக்கின பொருளில் எருச்சத்து ஜாஸ்தியா யிருக்குமென்பதில் சந்தேகமில்லை. நமது நிலங்களில் அநேகமாய் இந்திரிய வஸ்து குறைந்திருக்கின்றதென்றே சொல்லவேண்டும். இப்பேர்ப்பட்ட நிலங்களுக்கு நாகதாளியை அதன் கீழ் படிந்திருக்கும் எருச்சத்துள்ள மண்ணுடன் கூட்டி மக்கவைத்து அதை எருவாய் உபயோகப்படுத்தினால் அதிக அனுகூலத்தை உண்டாக்கும். இப்படி நாகதாளியை மண்ணுடன் மக்கவைத்து எருவாக உபயோகிப்பதால் கிருஷிகருக்கு இலேசாய் எரு அகப்படுவதுடன் அநேக விஷயங்களில் பிற்காலம் கெடுதியே உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் இந்த ராக்ஷஸப் பூண்டும் தொலைய ஏதுவாயிருக்கிறது.

நாகதாளியை மக்கவைத்து எருவாக அடியில் சொல்லும் முறைகளைக் கையாடிச் சித்தி பெறலாம்.

20338
சென்னை 600 008

சப்பாத்துக் கள்ளி

(1) ஆறு அடி அகலமும் 3 அல்லது 4 அடி ஆழமும் நமக்கு வேண்டிய அளவு நீளமும் உள்ள பள்ளங்களை சாரல் மழைகளுக்குப் பின்னும் தோண்டித் தயாராய் வைத்திருக்கவேண்டும். மழை காலங்களில் கிருஷிகருக்கு வேலை ஒழிந்திருக்கும் சமயங்களில் நாக தாளிப் புதர்களை வெட்டி அப்புறப்படுத்தி இக்குழிகளில் நிரப்பி, இக்குழிகளில் இருந்து எடுத்த மணலால் மூடிவிட வேண்டும். சில நாளைக்குள் குழிகளுக்கு உள்ளிருக்கும் சப்பாத்துக்கள்ளி சற்று மக்கி அமுங்கும். மண்ணை வெட்டிய இந்த அமுங்கிய இடங்களில் இது ஒரு வருஷத்துக்குள் மக்கி எருவாகும். ஒரு வருஷத்துக்குள் சப்பாத்துக் கள்ளிகளில் இருக்கும் முட்கள் மக்கி இருக்காவிட்டால் இன்னொரு வருஷம் அப்படியே வைத்திருந்தால் அம்முள்ளுகள் நன்றாய் மக்கிவிடும்.

(2) மழைகள் குறைவாய்ப் பெய்யும் இடங்களில் கிருஷிகருக்குச் சாவகாசமிருக்கும் போதெல்லாம் நாகதாளியை வெட்டி எங்கெங்கே செளகரியமா யிருக்குமோ அவ்விடங்களில் குவித்துக் காய விடவேண்டும். அதன்மேல் காய்ந்த புல், சருகு, கூளம் முதலிய வற்றை குவியல்கள்மேல் பரப்பி நெருப்பு வைத்தால் முட்கள் அநேகமாய் பொசுங்கிப் போகும். இச்சமயத்தில் இச்குவியல்களின் மேல் நாகதாளிப் புதர்களுக்கு அடியில் படிந்த மண்ணைக் கொண்டு வந்தாவது அல்லது அப்பக்கத்தில் அகப்படக் கூடிய மண்ணைச் சேர்த்து மேலே போட்டு மூடி உள்ளிருக்கும் வஸ்து மக்கும்வரை வைத்திருந்தால் இரண்டு மூன்று வருஷங்களில் நிலங்களுக்கு எருவாக உபயோகிக்கக் கூடிய ஸ்திதியில் வந்துவிடும்.

(3) மேல் சொல்லிய இரண்டு விதங்களும் சொய்யப் போதிய இடமில்லா விட்டால், மாடுகள் கட்டி சுண்ணும்பு அரைக்கும் ஆலைகளைப் போல் அமைத்து சுண்ணும்புக்குப் பதிலாய் நாகதாளியைப் போட்டு சுண்ணும்பைப் போல அரைத்தால் நாகதாளியில் தண்ணீர் அதிகமா யிருப்பதால் அரைமணி நேரத்திற்குள் நன்றாய் அரைபட்டு கொளகொள வென்று ஆகிவிடும். அதை மண்வெட்டிகொண்டு அப்புறப்படுத்தி குழிகளில் போட்டு அதன்மேல் மண்கொட்டி மூடி வைத்திருந்தால் ஜல்தியாய் மக்கி எருவாய்விடும். முட்களும் நட்டமாய் நிற்காமல் படுத்திருக்கு மாதலால் அவைகள் தைக்காது. இப்படி தயார் செய்தால் ஆறுமுதல் எட்டு மாதத்திற்குள் இது எருவாய் உபயோகிக்க லாயக் காகிவிடும்.

மேலே சொன்ன உபயோகத்தைத் தவிர நாகதாளி வேறுவிதமாயும் உபயோக மாகும். நாகதாளியை நறுக்கி வேகவைத்து அப்புறப்படுத்தியபின் இருக்கும் தண்ணீராவது சுண்ணும்புடன் கலந்து வெள்ளையடிக்க உபயோகப்படுத்தலாம். இப்படி வெள்ளையடித்த சுண்ணும்பு சுவர்களில் ஒட்டிகொள்ளுகிறதே தவிர மேலே ஒட்டுகிறதில்லை. ஒருபானை அல்லது சட்டியில் நாகதாளியை சிறு சிறு துண்டுகளாக வெட்டிப்போட்டு அது நிறையத் தண்ணீர் ஊற்றி

சுமார் 3 மணி நேரம்வரையில் நன்ருய்க் கிளறி வேகவைத்து அது ஆறினபின், அதிலிருக்கும் வெந்த தண்ணீரை வடிகட்டி வெள்ளை யடிக்கத் தயார் செய்திருக்கும் சுண்ணும்பு அல்லது கோபிக்கு 150 பாகம் சுண்ணும்பு ஜலத்துக்கு நாகதாளி வெந்து வடித்த தண்ணீர் ஒரு பாகம் ஊற்றிக்கலந்து வெள்ளையாவது அல்லது கோபியாவது அடித்தால் அவைகள் ஜாஸ்தி நிறமாயிருப்பதோடு சுவரிலும் நன்ருய் ஒட்டிக்கொள்ளுகிறது. சுவர்களில் ஜனங்கள் சாய்ந்தாலும் அது துணி முதலியவைகளில் ஒட்டிக்கொள்வ தில்லை. சாதாரணமாய் சுவர்களின் பக்கத்தில் உட்கார்ந்து அதில் சாய்ந்து கொள்ளும் வழக்கமுடைய நமது இந்திய வீடுகளில் புதிதாய் வெள்ளையடித்திருக்கும் சுவர்களின்மேல் சாய்பவர்க ளுடைய, துணியிலாவது, உடம்பிலாவது ஒட்டாமலிருப்பது ஒரு பெரிய அனுகூலம்.—(கொங்கு வேளாள மித்திரன்)

சென்னையில் தேசியவாரக் கொண்டாட்டத்தின் போது தேசிய சபையின் ஆதரவில் திருவல்லிக்கேணிக் கடலோரத்தில் நடை பெற்ற பொதுக்கூட்டத்தில் சென்னையிலுள்ள சில பொது வீதிகள் பாலங்கள், கட்டிடங்கள் முதலிய வற்றின் தற்போதுள்ள அந்நியப் பெயர்களை மாற்றிக் கீழ்க்கண்டபடி தேசியப் பெயர்களாக வைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது :—

பழைய பெயர்.	புதுப் பெயர்.
ஜியார்ஜ் டவுன்	காந்தி நகரம்
மரிஞ	திலகர் கட்டம்
மூர் மார்க்கெட்	ஷௌகட் பஜார்
ரிப்பன் பில்டிங்	தாதாபாய் மன்ஸில்
வில்லிங்டன் பாலம்	மாப்பிள்ளை பாலம்
ஹட்டன பாலம்	வாஜ்பே பாலம்
ஆண்டர்ஸன் பாலம்	ஆழ்வார் பாலம்
ஹாரிஸ் பாலம்	கோமளீஸன் பாலம்
ராபின்ஸன் பார்க்	மேரி வனம்
பீபிள்ஸ் பார்க்	அசோக வனம்
நேபியர் பார்க்	தில்லை வனம்
எட்வர்ட் பார்க்	தொழிலாளி பார்க்
லோன் ஸ்குவயர்	கிருஷ்ணராய சவுக்
ராபின்சன் பேட்டை	நந்தனார் புரம்
ஜியார்ஜ் குப்பம்	வள்ளுவர் குப்பம்
பைகிராட்ப்ஸ் ரோட்	கோகலே சாலை
பிராடிஸ் ரோட்	ஆண்டிரு சாலை
டாட்ஹண்டர் நகர்	குருநானக் நகரம்
ஐஸ்ஹவுஸ் ரோட்	விவேகாநந்தா சாலை
லாயிட்ஸ் ரோட்	ஜி. சுப்பிரமணிய ஐயர் சாலை

கடிதம் எழுதுவோர் புதிய பெயருடன் பழைய பெயரை நகக்குறிக்குட்படுத்திச் சேர்த்து எழுதுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.—குமரன்.

ஜெர்மானியர்க்குள் வழங்கும்

ஒரு பழங் கதை.

ஸ்ரீமாந் ஜே. எஸ். நோச் எழுதியது.

ஒரு தகப்பனுனவன் ஆறுபிள்ளைகளைக்காப்பது அரிது என்று ஜெர்மானியர் சொல்லிக் கொள்வது வழக்கம். அதற்கு எடுத்துக் காட்டாக அவர்கள் பின்வரும் கதையை வழங்கி வருகின்றனர் :—

"காஸ்பர்" என்று ஓர் கிழவனிருந்தான். அவன் தன்னுடைய கன்று காலிகளையும், நிலநீர்களையும், வீடுவாசல்களையும் தோட்டந் துரவுகளையும் தன்னுடைய மக்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்து, சாகுந்தனையும் தன்னை யாதரித்து வரும்படி ஏற்பாடு செய்தான்.

சிலகாலம் மூத்தபிள்ளையி னிடத்தில் இருந்தான். ஒருநாள் அந்தப் பெரியபிள்ளை "நாயனு, தாங்கள் சாய்வு நாற்காலி போட்டு சதா உட்கார்ந்திருக்கு மிடம் அந்தக் குழந்தையின் தொட்டிலைக் கட்டி வைப்பதற்குத் தகுதியான இடமா யிருக்கிறது. எனக்கு நேர் இளையவன் வீட்டில் இதைக்காட்டிலும் பெரிய அறை இருப்பதனுல் அங்கே போயிருப்பது உங்களுக்கு சௌகரியமா யிருக்கு" மென்று சொன்னுன்.

அந்தக் கிழவனும் அவன் மனம் நோகாம லிருக்கும்படி சரே லென்று இரண்டாவது குமாரனிடம் போய்ச் சேர்ந்து அங்கே சில நாள் வசித்துக்கொண் டிருந்தான். ஒருநாள் அந்தப் புத்திரன் "நீர் இந்த அறையிலே தானே புகுந்து கொண்டிருப்பது எனக்குத்தலை நோவாக யிருக்கிறது. ரொட்டிக்கிங்கு வைத்திருக்கும் என் தம்பி வீடு உமக்கு அநுகூலமா யிருக்கு மல்லவா"? என்று சொன்னுன். கிழவன் "சரி, சரி," என்று தலையசைத்துக் கொண்டு மூன்ருவது புதல்வனிடம் போயினுன். அங்கு போய்ச் சேர்ந்த ஏழெட்டு நாளில் அந்தப் புண்ணியவான், "அண்ணு! இங்கே எந்நேரமும் வருவாரும் போவாரும் ஏக சந்தடியாயிருக்கிறது. உமக்கு, பாவம் பகலில் ஒரு நாழிகை கூட நித்திரை பிடியாது.

ஆகையால் நம்முடைய பட்டணத்து மதில் சுவரின்மேலே என்னுடைய சகோதரி வாசஞ்செய்கிற வீட்டைப்போய்ச் சேர்ந்து போவீரானுல் உமக்கு மெத்த சவுகரியமாயிருக்கு மென்று தோன்றுகிறது. அது நிசப்தமான இடம்" என்ருன்.

கிழவன் ஐயோ! இப்படி இடம் இடமாக மாறிக்கொண்டு உழலும்படி நேரிட்டதே" என்று தன்னுள்ளே அருவருத்துக் கொண்டு, "ஆமாம், நல்லது, நான் போகிறேன்". என்று சொல்லி விட்டு, "பெண்களுக்குச் சிறிது இளகின நெஞ்சு உண்டெனச்

சொல்லுவார்கள். ஒருவேளை, அங்கே சற்று சௌக்கியமாக இருந்தாலும் இருக்கலாம்'' என்று எண்ணிக்கொண்டு அங்குபோய்ச் சேர்ந்தான்.

அங்கு போய்ச் சேர்ந்து நின்று நிதானிப்பதற்குள் அந்த புண்ணியவதி, ''நாயனு! நீங்கள் இந்தப் படிகளின்மேல் ஏறவும் இறங்கவும் வெகு சங்கடப் படுவீர்கள். எங்கே விழுந்து விடுவீர்களோ என்று எனக்கு வயிறு பக்கு பக்கு எனப் பதைக்கிறது. சம நிலத்தில் குடியிருக்கிற என் தங்கை வீடானுல் உங்களுக்கு உத்தமமா யிருக்குமே'' என்ருள்.

அந்தக் கிழவனுக்கு இதைக்கேட்டு நெஞ்சம் புண்ணுய்விட்டது. இருந்தாலும் தன் மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு ஐந்தாவது பிறப்பாகிய எலிஜபத் என்னும் புதல்வியிடம் போய்ச் சேர்ந்தான்.

அந்த உத்தமி இந்த வீட்டிற்குப் பக்கத்திலே ஏரிகுளங்களிருப்பதனுல் வயது சென்றவர்களுக்கு இது வசமான இடமல்லவே. வெட்டியாரவேலை செய்யும் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிற கடைசி குமாரத்தி வீடு காற்ருேட்டமாய் சுகமாய் இருக்கிறதே'' என்று சொல்லி யனுப்பி விட்டாள்.

கிழவரும், ''நல்லது, நான் போய் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு மெல்ல நகர்ந்துபோய் அருமையான ஆருவது புத்திரியிடத்தில் சேர்ந்தார்.

அங்கு போய்ச் சேர்ந்து எண்ணி இரண்டு நாளானதும், அந்த வீட்டுப் பேரப்பிள்ளை எதிரிலேவந்து,'' தாதா! அம்மா அத்தையினிடத்தில் நேற்று சொன்னுர்கள் தெரியுமா? அதோ அங்கே நாயனு தோண்டி வைக்கிற பிரேதக்குழிகளில் ஒன்றிலே போய்ச்சேர்ந்தாயானுல் உனக்குச் சுகமாயிருக்குமாம் என்ன, தாதா அது உனக்கு இஷ்டந்தானு? என்ருன்.

அச்சிறுவன் அப்படிச் சொல்வதைக் கேட்டு நெஞ்சம் புண்ணுகி, மனம் வேக்கா டெடுத்து, எழுந்து சாய்வு நாற்காலியின்மேல் போய் படுத்து கண்ணை மூடிக் கொண்டான்.

அப்படியே கடைசியாக அந்தப் பிரேதக்குழியே அவனுக்கு நிம்மதியான இடமாயிற்று. அவனுடைய சரீரம் அங்கே கிடக்க, அவனுடைய ஆத்துமா பரலோகப் பிராப்தி யடைந்தது.

''ஒரு பிள்ளை பெற்றவருக்கு உறியிலே சோறு, நாலு பிள்ளை பெற்றவருக்கு நடுத்தெருவிலே சோறு'' என்று தமிழர் சொல்வதும் இதைத்தானே காட்டுகிறது.

பாதுல மித்திரன்.



கனந்தங்கிய ஆர். கே. சண்முகம் செட்டியார், எம்.எல்.ஏ.

பார்சிகளும்

அவர்களது மதமும்

[இந்தியர்கள் ஒருவ ரொருவரது மத தத்துவங்களை யறிந்திருத்தல் சாலச்சிறந்ததே யாதலாலும் பார்சி மதத்தைக் குறித்து நம்மவர்களிற் பலர் அறியா ராதலாலும் கீழ் வரும் உபந்யாசத்தை வெளியிடலானேம். இவ்வுபந்யாசம் ஸ்ரீ அங்கிலாசாரியா என்னும் பார்சிகனவனுல் ஒப். எம்.ஸி. ஏயிற் செய்யப்பட்டதாகும்]

மனத்தை அடக்கி அறிவைச் செழுமைப்படுத்துதலே ஜோரேஸ்திரியானியம் என்றழைக்கப்படும் பார்சி மதத்தின் சாரமாகும். "மனிதன் சிந்தனைப் பிராணி. அவன் எதனைச் சிந்திக்கின்றனே, அதுவே யாகின்றன்" என ஒரு உபநிஷத்து கூறுகின்றது. பார்சி மதத்தின் கருத்தும் இதுவே யாகும். ஜோரேஸ்திரியானியம் என்னும் பார்சி மதம் 7-ம் நூற்றாண்டில் எகிப்து சீன ருஷியா பாரசீகம் முதலிய நாடுகளிற் பரவியது. பார்சி மதக் கிரந்தமாகிய 'ஜெந்தாவஸ்தா' என்னும் நூலில் வேதங்களிலுள்ள சிலவார்த்தைகள் அப்படியே காணப் படுகின்றன. பார்சிகள் இந்தியாவில் 13-ம் நூற்றாண்டு முதல் வசித்து வருகின்றனர். ஜோராஸ்திரியானியம் கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் சங்கிலிக் கோர்வையாய் விளங்கியது. பார்சிகள் 1 லக்ஷத்து ஓராயிரம்பேர்தா னிருக்கின்றனர். பார்லிமெண்டிலுள்ள 3 இந்திய அங்கத்தினர்களும் பார்சிகளே. ஒருவர் தாராளக் கட்சியைச் சேர்ந்தவர்; மற்றொருவர் குறுகிய கட்சிக்காரர்; மற்றொருவர் தொழிற்கட்சியங்கத்தினர். கல்வியறிவில்லாத பார்ஸி ஒருவருமேயில்லை. தொழில்கள் நடத்துவதில் பார்சிகள் முதன்மையானவர்களா யிருந்து வருகின்றனர். இதனுல் அவர்கள் ஓரளவு சுயாதீன புருஷர்களா யிருப்பது தெளிவாகும். பார்சிகுல திலகமாகிய தாதாபாய் நௌரோஜியை அறியாதாரில்லை. இனி ஜோரேஸ்திரியானிய மதத்தின் சாஸ்திரக் கொள்கைகளைச் கவனிப்போம். ஜோரேஸ்திரியர் இவ்வுலகத்தை இரு கூறுகளாகப் பிரித்தார். அதாவது காணக்கூடியது ஒன்று, காணக்கூடாதது ஒன்று. பரம சக்தியானது வரை

யறுக்கப்படக் கூடாத காணக்கூடா வஸ்துவிலும் காணக் கூடா வஸ்துவாகும். கபிலரது கருத்தும் இதுவே. நெருப்பைத் தொழும் மாத்திரத்தில பார்சிகளின் மதக்கிரியை அடங்கிவிடவில்லை. பார்சிகளின் மதபரிபாலனம் 33 ஞானிகளின் கையிலிருந்தது. இவர்கள் பரஸ்பரம் ஒத்துழைத்து மதக்கிரியைப்பற்றிய எல்லாவற்றையும் தீர்மானஞ் செய்தார்கள்; சத்து சித்து ஆனந்தம் என்ற மூன்றும் ஜோரேஸ்திரியான்ய சமயத்தின் அம்சமாகும். பார்சி மதக்காரர் ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் சகலருக்கும் உபகாரஞ் செய்கின்றனர். உதாரணமாக பம்பாயில் ஆஸ்பத்திரிமுதல் முதலாகக் கட்டியது ஒரு பார்சிக்காரரே. முதலாவதாக பெண்களுக்கு ஆஸ்பத்திரி கட்டியதும் ஒரு பார்சிக்காரரே. பம்பாயில் எல்பின்ஸ்டன் கல்லூரியை ஸ்தாபித்தவர் ஒரு பார்சியே. பார்சிமதம் அஹிம்சையைக் குறித்து அவ்வளவு போதிக்காவிட்டாலும் ஹிம்சை புரிதலை ஊக்கப்படுத்தவில்லை. ஓரளவு தீமையை எதிர்ப்பது தமது கடமைதானென்று பார்சிகள் கருதுகின்றனர். பார்சிகள் பிறப்பிலேயே கிளர்ச்சி செய்பவர்களாவர். இந்து மதத்தைப்போன்றே ஜோரேஸ்திரியானியமும் 'வித்தை அவித்தை'யைக் குறித்துக் கற்பியா நிற்கின்றது. கி. பி. 1199-ம் வருடம் பிரசாரணஞ் செய்யப்பட்ட மாதவசாரியாரின் கோட்பாட்டுக்கும் ஜோரேஸ்திரியரின் போதனைகளுக்கும் அதிக ஒற்றுமையுண்டு. மேலும் ஜோரேஸ்திரீயானியம் தற்கால பிரகிருதி சாஸ்திரத்திற்கும் முரண்படாமல் இருக்கின்றது. மரணத்திற்குப் பின் மனிதரின் நிலை இன்னதென்பதைக் குறித்து பார்சி மதம் கொண்டிருக்கும் அபிப்பிராயமும் ஒன்றேயாகும்.

தேசோபகாரி.

உலகத்திலேயே குளிர்ந்த இடம்.

கிழக்கு ஸைபீரியாவிலுள்ள வர்ச்சோ ஜானஸ் என்ற மாகாணந்தான் உலகத்திலுள்ள எல்லா இடங்களிலும் குளிர் மிகுந்த இடமாயிருக்கிறது.

சங்கீதத்தினால் செவிட்டை நீக்கிவிடலாம். பிரான்சில் இந்த முறை அநுஷ்டானத்தில் நடக்கிறது இங்கிலாந்திலும் முயன்று வருகிறார்கள்.

இந்தியாவின் ஜனசங்கியை.

1921-ம் வருடமெடுத்த இந்தியா ஜன சங்கியைக் கணக்கின்படி இந்தியாவின் மொத்த ஜனத்தொகை 31,89,42,480 பேர். இதில் பிரிட்டிஷ் பிரதேசத்தில் 24, 70, 03, 293 பேர் இருக்கின்றனர். அதாவது இந்தியா ஜனங்களில் 100-க்கு 77 பேர் பிரிட்டிஷ் பிரதேசத்திலிருக்கின்றனர். இந்தியர் சுதேச சமஸ்தானங்களில் 7,19,39, 187 பேர் இருக்கின்றனர். இந்தியாவின் ஜனத் தொகை பத்து வருடங்கட்குள் 100-க்குச் சுமார் ஒன்றேகால் அதிகரித்திருக்கிறது. இந்தியாவின் விஸ்தீரணம் அமெரிக்கா ஐக்கிய ராஜதானிகளிற் பாதியே. ஆனால் இந்த அமெரிக்கா ஐக்கிய ராஜதானிகளிலுள்ளதுபோல் மும்மடங்கு ஜனங்கள் இந்தியாவி லிருக்கின்றனர்.

இந்தியாவின் பிரதான நகரங்கள்.

இந்தியாவிலுள்ள கீழ்க்கண்ட பிரதான நகரங்கள் ஒவ்வொன்றிலும் லக்ஷம் பேர்களுக்கு மேல் வசிக்கின்றனர். விவரம் வருமாறு :—

		ஜனத்தொகை.
கல்கத்தா [சுற்றுப்புறங்களும் ஹௌராவும் உட்பட]	....	13,27,547
பம்பாய்	...	11,75,914
சென்னையும் கண்டோன்மெண்டும்	...	5,26,911
ஹைதராபாத்தும் கண்டோன்மெண்டும்	...	4,04,187
இரங்கூனும் கண்டோன்மெண்டும்	...	3,41,962
டில்லியும் கண்டோன்மெண்டும்	...	3,04,420
லாகூரும் கண்டோன்மெண்டும்	...	2,81,781
ஆமதாபாத்தும் கண்டோன்மெண்டும்	...	2,74,007
லக்னோவும் கண்டோன்மெண்டும்	...	2,40,566
பெங்களூர்	...	2,37,496
கராச்சியும் கண்டோன்மெண்டும்	...	2,16,883
பூனாவும் கண்டோன்மெண்டும்	...	2,14,786
காசியும் கண்டோன்மெண்டும்	...	1,98,447
ஆக்ராவும் கண்டோன்மெண்டும்	...	1,85,532
மாந்தலேயும் கண்டோன்மெண்டும்	...	1,48,917

நாகபுரி	...	1,45,193
மதுரை	...	1,38,894
திருச்சியும் கண்டோன்மெண்டும்	...	1,20,422

மேற்கண்ட ஜனத்தொகைகளை உலகத்தின் மற்றைய பாகங்களிலிருக்கும் பெரும் பட்டணங்களிலுள்ள ஜனத் தொகைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நலமாயிருக்கும். லண்டனின் ஜனத்தொகை 75; லக்ஷம் நியூயார்க்கு 55 லக்ஷம்; பாரிஸ், சிகாகோ, பீட்ரோகிராட், டோக்கியோ முதலிய நகரங்களின் ஜனத்தொகை தனித்தனி 20 லக்ஷத் திற்கு மேலாகும். பெர்லினிலும் வியன்னுவினும் 20 லக்ஷத் திற்குக் குறைவான ஜனங்களே இருக்கின்றனர். மாஸ் கோ, பிலாடெல்பியா, காண்டன், கிளாஸ்கோ, பீகின், கான்ஸ்தாந்தி நோபில் ஆகிய நகரங்களில் 10 லக்ஷத்திற்கு மேற்ருன் இருக்கின்றனர்.

ஆண் பெண் பாலாரின்தோகை வித்தியாசம் அதிகரிக்கின்றது.

ஆண் பெண் பாலாரின் தொகைகள் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசப்பட்டு வருகின்றன. சென்ற 50 வருடங் களாக வங்காளத்தில் பெண்பாலார் தொடர்பாகக் குறைந் து வருகின்றனர். காரணமென்னவெனில், நகரங்களிற் குடியேறும் அநேகர் தமது குடும்பங்களை தாம் மூன் னிருந்த விடத்தில் விட்டுவிட்டு வருகின்றனர். கல்கத்தா விலும் தொழில் மிகுந்த மற்றைய நகரங்களிலும் இரு பாலாருடைய எண்ணிக்கையிலும் உண்டாயிருக்கும் ஏற் றத்தாழ்வு அபாயத்திற் கறிகுறியானதா யிருக்கிறது, கல்கத்தாவில் விவாஹமான ஆண்கள் 1,000 பேருக்கு விவாஹமான பெண்கள் 374 பேர்வீதமே இருக்கின்றனர். ஆண்கள் அதிகமாயிருப்பது துன்மார்க்கத்தை மிகவும் அதிகரிக்கச் செய்திருக்கிறது. இதனுலேயே அநேகர் தமது மனைவிகளை நகரங்களுக்குக் கொண்டுவருவதில்லை யென்று கூறப்படுகிறது. இரங்கூனிலும் இதேவிதமான நிலைமை யிருந்து வருகிறது. இந்நகரில் 1000 ஆண்களுக்கு 444 பெண்கள் வீத மிருக்கின்றனர். மாந்திலேயிலோ அப்படியல்ல. அங்கு 1000 ஆண்களுக்கு 945 பெண்கள் வீதமிருக்கின்றனர். பம்பாயில் 1000 ஆண்களுக்கு 624 பெண்கள் வீதமும், கராச்சியில் 629 வீதமும், ஆமதா பாதில் 763 வீதமும், ஷோலாபுரியில் 894 வீதமும் இருக் கின்றனர்.

பெத்தாச்சி வள்ளல்

தமிழுலகத்திலே தனித்தலை வள்ளலாய் விளங்கிய ஸ்ரீமாந் திவான் பகதூர் பெத்தாச்சி செட்டியாரவர்களின் அகால மரணத்தினால் தமிழ்மொழி இணையில்லா ஒரு காப்பாளரை இழந்துவிட்டது. பெத்தாச்சி வள்ளலின் கொடையினால் நலம் பெறாத புலவர்களும், ஆசிரியர்களும் கழகங்களும், மற்றும் பொது ஸ்தாபனங்களும் தமிழுலகத்தில் இல்லையென்றே சொல்ல லாம்.

திருச்சிராப்பள்ளி நாஷனல் கல்லூரி நிதிக்கு 50,000 ரூபாவும், மைலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மாணவர் விடுதிக்கு 15,000 ரூபாவும், சென்னை கோஷா ஆஸ்பத்திரிக்கு 20,000 ரூபாவும் நமது வள்ளல் கொடுத்துள்ளார். தமது ஜமீன்தாரியின் தலைநகரமான கரூரிலே தந்தை பெயரால் ஒரு மாணவர் விடுதியும், தாயார் பெயரால் ஒரு பெண் கல்விச்சாலையும் அமைத்துள்ளார். பாளயங்கோட்டைச் சைவசபை, மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஆகிய ஸ்தாபனங்களுக்கு நமது வள்ளல் செய்துள்ள பொருளுதவியைத் தமிழுலகம் நன்கறியும். கரூரின் பக்கத்திலுள்ள ஒரு கிராமம் தீப் பற்றி யெரிந்து அழிந்ததின் காரணமாக அவ்வூர் ஜனங்கள் குடியிருக்க வீடில்லாமல் கஷ்டப்படுவதைக் கண்ட நமது வள்ளல் 75,000 ரூபா செலவு செய்து ஒரு புதுக்கிராமம் அமைத்தருளினர். அவ்வூர் இன்றும் பெத்தாச்சிப்புறம் என்னும் பெயரால் வழங்குகின்றதாம். ஐரோப்பியப் பெரும்போர் சாலத்திலே, போர்முனையில் காயமடைந்தவர்களின் சிகிற்சைக்காக ஏற்பட்டிருந்த 'மத்ராஸ்' என்ற ஆஸ்பத்திரிக் கப்பலுக்கு, இந்திய முடிமன்னர்களை யொப்ப நமது வள்ளலும் மாதாமாதம் பெருந்தொகை வழங்கி வந்தனர். தமிழ்மொழி வளர்ச்சிக்காக நமது வள்ளலைப்போல் பொன் மாரி பொழிந்த சீமான்கள் சரித்திர காலத்திலே, தமிழுலகத்தில் இல்லவே இல்லை. நூலாசிரியர்களுக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் நமது வள்ளல் வழங்கியுள்ள பொருள் மிகப் பெரிதாம். நமது வள்ளலின் பொருளுதவியால் கல்விகற்ற மாணவர்களும் பல்லாயிரராவர். நாளிது வரையில் நமது வள்ளல் பெருமான் பொதுநல விஷயமாய் 45 லக்ஷம் ரூபா செலவு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கர்னனும் பின்னுமாறு வரையாது வழங்கிய இத்திருவாளரின் மரணத்தால் தமிழுலகம் அடைந்த நஷ்டம் மிகப் பெரிதே. இப்புண்ணிய புருஷரின் ஞாபகார்த்தமாக, அவரது கொடை நலத்தால் நிலைபெற்ற ஸ்தாபனங்கள் பலவுள வெனினும், தமிழுலகத்தின் மதிப்புக்குறியாக ஏதேனு மொன்று செய்தல் மிக அவசியம். பெத்தாச்சி வள்ளலிடம் அன்பும் அபிமானமு முடையோர் இவ்வழி யுழைக்க முன் வருவார்களென்று நம்புகின்றோம்.

பெத்தாச்சி வள்ளலின் ஆத்மா பேரின்பநிலை அடைவதாக!

முரசொலி

சுவாமி சிரத்தாநந்தர் இம்மாதம் 6உ பங்களூரிலே தமது ஹிந்து மகாசபையின் நோக்கங்களைப்பற்றி ஒரு அரிய பிரசங்கம் செய்தார். பாரத நாட்டின் க்ஷேமத்துக்காகப் பாடுபடும் உண்மை உழைப்பாளிகளில் நமது சிரத்தானந்த சுவாமி தலை சிறந்தவர். ஆகவே அவரது மொழிகளை நம்மவர் நன்கு பாராட்டிப் பின்பற்ற முயல வேண்டியது மிக அவசியம்.

***

தமது பிரசங்கத்தில் தற்காலத்துக்கு முக்கியமான பல விஷயங்களை சுவாமிகள் விளக்கிக் காட்டினார். ஹிந்துமதத்தைப் பற்றிப் பேசியபோது, நமது சமயநூல்களில் 'ஹிந்துமதம்' என்னும் பெயரே காணப்படவில்லை யென்றும் நாம் நம்மை ஹிந்துக்கள் என்று கூறிக்கொள்வதை விட ஆரியர் எனக் கூறுவதே பொருத்த முடையதென்றும், இந்தியாவில் தோன்றிய மதங்களெல்லாம் ஹிந்து மதத்துள் அடங்குமென்றும் ஆகவே புத்தர்களும் பார்ஸிகளும் ஹிந்துக்கள் ஆவரென்றும் அவர் தெளிவுறக் காட்டினார். பார்ஸி பாஷையில் நூற்றுக்கு எண்பது பதங்கள் ஸம்ஸ்கிருதச் சொற்கள் என்றும் பார்ஸி மதத்துக்கும் அதர்வ வேதக் கோட்பாட்டுக்கும் பெருத்த வித்தியாசமில்லை யென்றும் அவர் சொன்னார்.

***

1881-ஆவது வருஷத்துக்கும் 1921-ஆவது வருஷத்துக்கும் இடையில் ஹிந்துக்களின் தொகை நூற்றுக்கு எழுபத்தினாலிலிருந்து அறுபத்தொன்பதாகக் குறைந்திருக்கிறதாம். மகமதியர் தொகையோ நூற்றுக்குச் சற்று ஏறத்தாழ 7 விழுக்காடு பெருகியிருக்கிறதாம். ஆகவே ஹிந்துக்கள் தொகை நாளுக்குநாள் சுருங்கி வருகிறதாம்.

***

மகமதியர் சந்தான விருத்திக்குரிய புருஷ சக்தி மிகுதியாக உடைத்தா யிருக்கிறார்களாம். அதற்குக் காரணம் அவர்கள் உட்கொள்ளும் போஷண சக்தியுடைய உணவாம், மகமதியர்கள் ஹிந்துக்களைவிட அதிகம் பால் சாப்பிடுவதே அவர்களது உரத்துக்குக் காரணமென்றும் மாமிச போஜனமல்ல வென்றும் சுவாமி அபிப்பிராயப்படுகிறார். இது ஆராய்ச்சிக்குரிய தருக்க விஷயம்.

***

பசுப் பாதுகாப்பைப் பற்றியும் சுவாமி மிக உருக்கமாகப் பேசினார். பசுக்கொலைக்கு மகமதியர்களை ஹிந்துக்கள் குறை கூறுகிறார்கள். வருஷத்துக் கொருமுறை வரும் மகமதியப் பண்டிகை நாளில் அவர்கள் ஒருலட்சம் பசுவைக் கொலைசெய்வதாக வைத்துக்கொண்டாலும், இந்தியப்படைவீரர்களின் உணவுக்காகப் பத்து லட்சம் கால்நடைகளும் பொதுஜன ஆகாரத்துக்கு முப்பதுலட்சம் கால்

நடைகளும் பர்மா தேசத்தார் முதலியோர் உணவுக்குப் பதினைந்து லட்சம் கால்நடைகளும் தோலுக்காகப் பத்து லட்சம் கால் நடைகளும் வருஷா வருஷம் கொல்லப்படுவதற்கு யாரைக் குறை கூறுவ தென்று சுவாமி மிகச் சாதுரியமாகக் கேட்டார்.

***

நமது ஆசாரங்களைப்பற்றி சுவாமிகள் உரைத்த மொழிகளும் பெரிதும் பாராட்டத் தக்கவை. மகமதியர்களின் ஆசார முறைகள் ஹிந்துக்களின் ஆசார முறைகளைவிட மிகச் சிறந்தவை யென்பது சுவாமிகள் கருத்து. இந்தியாவிலே ஒன்று முதல் ஐந்து வயதுக்குட் பட்ட பால்ய விதவைகள் 15,000 பேர்; 5 முதல் 10 வரை வயது டைய விதவைகள் ஒரு லட்சத்துக்குமேல்; 10 முதல் 15 வரை வயதுடைய விதவைகள் 3 லட்சம்; 15 முதல் 20 வரை வயதுடைய விதவைகள் 6 லட்சம். இதற்குக் காரணம் அநாகரீகமான பால்ய விவாகமல்லவா என்கின்றார் சுவாமிகள்.

***

நமது நாடு வறுமையடைந்து அடிமைப்பட்டிருப்பது அதிசய மன்று. நடைப்பிணமாய் உயிர்தாங்கும் பெருந்தொகையினரான இந்த விதவைகள் சிந்தும் கண்ணீர் வீண்போகுமா? இந்த அபலை களின் கண்ணீரே நமது ஸர்வ இழிவுகளுக்கும் காரணமென எமக் குத் தோன்றுகின்றது.

***

பின்னர், ஹிந்துக்கள் தேகப்பயிற்சி விஷயத்தில் கவனம் செலுத்தி உடம்பை வளர்க்கவேண்டுவது முக்கியமென சுவாமிகள் கூறுகின்றனர். தமிழகத்தாருக்கு என்னும் வியாச ஆசிரியர் கூறு கிறபடி, நம்மவர் (விசேஷமாகத் தென்னாட்டார்) கீரைத்தண்டு வேர் பிடுங்கவும் ஏலேலப் பாட்டுப்பாடும் நிலைமையில் இருக்கின்றனர். துர்ப்பலருக்குச் சுகமில்லை; புகழில்லை; சுதந்தரமில்லை. ஜீவிதப் போராட்டத்திலே வலியற்றோர் அழிந்து படுதல் திண்ணம். வீர முடையோரே வெற்றி பெறுவர். இது பிரத்தியக்ஷம்.

***

கடைசியாக, நமது முன்னேற்றத்துக்குத் தடையாகவுள்ள சமய சம்பிரதாயங்களை நீக்கி, சமய தருமத்தை உத்தாரணம் செய் வதே இந்து மகாசபையின் தலைமையான நோக்கமென்றும், தருமம் தெய்வ சிருஷ்டியென்றும் சம்பிரதாயம் மனித சிருஷ்டியென்றும் கூறி முடித்தார்.

***

தென்னாட்டிலே சமய தருமம் அறவே மறைந்து போகின்றது; சமய சம்பிரதாயமே தாண்டவ மாடுகின்றது. ஜாதிச்சண்டைக்கும் சமயச்சண்டைக்கும் சமய சம்பிரதாயமே காரணம். தென்னாடு எக்காலம் கண் விழிக்குமோ?

***

திருநெல்வேலி சன்னியாசிக் கிராம சம்பவத்தைப்பற்றி கல்கத்தா 'மாடர்ன் ரிவ்யூ' ஆசிரியர் எழுதிய ஒரு குறிப்பிலே சன்னி

யாசிக்கிராமம் பிராமணர்களை அவர் வைதீக பைத்தியக்காரர்கள் (Holy Lunatics) என அழைக்கின்றார். தங்கள் தெருவைச் செப்பனிட உயர்ந்த ஜாதி ஹிந்துக்களே வேண்டுமென்று விரும்பிய சன்னிபாசிக் கிராமத்தார் “உயர்ந்த ஜாதி” ஹிந்துக்களைக் கொண்டே தங்களுக்கு வேண்டிய ஆகாரங்களையும் மற்றப்பொருள்களையும் சேகரித்துக் கொள்ளவேண்டும். உயர்ந்த ஜாதியாரைக் கொண்டே அவர்கள் தனியாகப் புகைவண்டிகள் நடத்திக்கொள்ள வேண்டும், அவர்கள் உபயோகிக்கும் மரத்தூண்கள் எஃகு, இரும்பு, ஆதியனவற்றை அவர்கள் உயர்ந்த ஜாதியார்களைக்கொண்டே வெட்டி எடுப்பிக்கவேண்டும். அவர்களது வீடுகள் உயர்ந்த ஜாதியாராலே கட்டப்படவேண்டும். அவர்களுடைய தெருக்களைத் துலக்கவும், கொல்லைகளைச்சுத்தம் செய்யவும் உயர்ந்த ஜாதியாரையே அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டும். அல்லது கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்தப் பூலோகத்திற்கப்பால், உயர்ந்த ஜாதியாரால் அவர்களுக்கென்று சிருஷ்டிக்கப்பட்டு அவர்களைச் சேர்ந்தவர்களே வாழ்ந்து வரும் ஒரு தனியுலகத்துக்கு அவர்கள் சென்று விடவேண்டும்” என்று அவ்வாசிரியர் காரமாகக் கூறுகின்றார். ஏனெனில் இந்த உலகம் எத்தகையோருக்கும் பொதுவான சாதிபேதமற்ற ஒரு கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது. இந்த உலகத்தை சிருஷ்டித்த கடவுள் தீண்டப்படாதவர்களையும், அண்டப்படாதவர்களையும், நிழல் படப்படாதவர்களையும், பார்க்கப்படாதவர்களையும் தொட்டுக்கொண்டும், அவர்கள் உயிருக்கு உயிராகவும் ஆன்மாவுக்கு ஆன்மாவாகவும் இருந்து வருகிறார். இம்மட்டோ! இக்கடவுள் கீழான மிருகங்களிலும் கீழாக மதிக்கப்படுவனவற்றிலும் விளங்கி வருகிறார்.

***

வைக்கம் ஸத்யாக்ரஹப் போரைப்பற்றியும் அப்பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது. “திருவிதாங்கூர் அரசாங்கத்தார் தீண்டப்படுகிறவர்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் நல்லவர்களாய் நடந்துகொள்ள முடியாது. அவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமானால் கோயில் பரிபாலன கர்த்தர் பதவியை அரசாங்கத்தார் விட்டுவிட வேண்டும். ஒரு பரிபாலன கர்த்தர் ஸ்தானத்தை விட்டு விட்டுப் போகச்சொல்ல யாருக்கும் அதிகாரமில்லை. ஆனால் ஒரு பரிபாலன கர்த்தர் தமது மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்துகொள்ளுவதையும் ஒருவருக்கும் ஒப்ப முடியாது. ஆகையால் திருவிதாங்கூர் அரசாங்கத்தார் ‘பரிசுத்தமற்ற’ கேரளப்பிராமண உலகத்தின் நல்லெண்ணத்தைப் பெற்று முன்னிருந்த நிலைமையை அடைய விரும்பினால் அவர்கள் ஆலய பரிபாலன கர்த்தர் ஸ்தானத்தை விட்டு விடட்டும். தங்கள் சுதந்தரங்களைத் தாமே காத்துக்கொள்ளும்படி இந்த வைதீகப் பைத்தியக்காரர்களை விட்டுவிட வேண்டும். அந்த ஊர் பிராமணர்களுக்குத் துரைத்தனத்தார் அனு

கூலமாயிருந்தால் அந்த விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லி விடவேண்டும். மனித சுதந்தரத்தைக் காப்பாற்ற துரைத்தனத்தார் விரும்பினால் கோவில் பரிபாலன கர்த்தாஸ்தானத்தை அவர்கள் விடவேண்டும். இரண்டு மில்லாமலிருந்தால் துரைத்தனத்தார் உண்மையற்றவர்கள் என்றும் புத்தியில்லாதவர்கள் என்றும் கேரளப்பிராமண மனப்பாங்கில்லாத ஏனையோர் நினைப்பார்கள்... ......இந்தியாவின் மற்றப்பாகங்களைவிட திருவிதாங்கூர் 'கல்வியில்' முன்னேற்ற மடைந்துவிட்டதாகப் பெருமை பாராட்டிக் கொள்ளுகின்றது. இது என்ன கல்வியோ? ஹிந்துக்கள் மாட்டிறைச்சியை மிகவும் கேவலமாக நினைப்பவர்கள். மாட்டிறைச்சியைத் தின்னும் கிறிஸ்தவர்களும் மகமதியர்களும் இத்தெருவில் நடமாடலாம். மாட்டிறைச்சியைத் தின்னாத ஹிந்துக்களில் ஒரு வகுப்பார் இந்த முடுக்குகளில் நடமாடக் கூடாதாம். இந்தியாவின் மற்றப் பாகங்களைவிடத் தென்னாட்டில் இந்தியக்கிறிஸ்தவர்கள் தொகை மிகுந்திருப்பதில் அதிசய மொன்றுமில்லை.

***

திருச்சிராப்பள்ளியிலிருந்து வெளிவரும் 'ஹிந்து மெஸேஜ்' என்னும் ஆங்கில வாரப்பத்திரிகை தீண்டாமையைப்பற்றி எழுதிய ஒருதலை யங்கத்தில் "தீண்டாமை ஆத்மீகமான ஒரு பிரச்னை. ஒருவனைத் தீண்டப்படாதவன் என்று நாம் கூறினால் அவன் நம்மைவிட உயர்ந்தவனென்றோ தாழ்ந்தவனென்றோ பொருள்படாது......... மெய்யான பிரம்ம ஞானம் பெற்றவன் சண்டாளனாயிருந்தாலும் அவனே என்குருவென்று ஸ்ரீமத் சங்கராசாரியர் மனீஷ பஞ்சகத்தில் கூறியிருக்கிறார்" என்று பொருள்படுமாறு கூறுகின்றது" அத்தலையங்கத்தின் போக்கைக் கவனித்தால் தீண்டப்படாதவர்கள் ஆத்ம ஞான மற்றவர்கள் என்றும் தீண்டப்படுவோர் ஆத்ம ஞான முடையவர்கள் என்றும் பொருள் தொனிக்கின்றது.

***

இந்த ஏட்டுச் சுரைக்காய் நியாயம் நமக்குப் புதிய தல்ல, தீண்டாமையைப் பற்றிய வாதம் கிளம்பும்போ தெல்லாம் இந்த நியாயம் கூறப்படுவ துண்டு. அனுபவ முறையில் இந்த நியாயம் எம்மட்டுக் கையாளப்படுகிற தென்று நாம் பார்க்க வேண்டும். கேரளத்திலுள்ள ஈழவர்களுக் கெல்லாம் குலகுருவாக விளங்குகிற ஸ்ரீ நாராயண குருசுவாமி ஒரு பெரிய ஞானி. அவரிடம் ஒரு நிமிஷமாவது வார்த்தையாடும் பாக்கியம் பெற்றவர்களுக்கு அவருடைய பாண்டித்தியமும் புனிதத்தன்மையும் விளங்காமல் போகா. ஆலயப் பிரவேச முடைய உயர்ந்த ஜாதி ஹிந்துக்களிலும் பிராமணர்களிலும் அவருக்கு இணையான ஆத்மீக ஞான முடையவர்கள் மிகவும் அபூர்வ மென்றே சொல்ல வேண்டும். எனினும் என்ன? அந்த ஞானிக்கும் ஹிந்துக்களுடைய ஆலயங்களில் பிரவேசிக்க

உரிமையில்லை; மூர்த்தியைத் தொட்டுப் பூஜை செய்ய அதிகாரமில்லை. காயத்திரி மந்திரம் கூட அறியாத பிராமணர்களுக்கு எல்லா உரிமைகளு முண்டு. இந்த ஸ்ரீ நாராயண குருசுவாமிகள் ஈழவர்களுக்காகத் தனியாலயங்கள் பல கட்டுவித்து சில பிரதிஷ்டையும் செய்துள்ளார். ஒரு முறை ஒரு நம்பூதிரிப்பிராமணன் அவரை அடுத்து ஈழவனுக்கு சிவப்பிரதிஷ்டை செய்ய அதிகாரமுண்டா என்று கேட்டாராம். உடனே சுவாமிகள் "நான் பிராமண சிவனை பிரதிஷ்டை செய்யவில்லை. ஈழவ சிவனையே பிரதிஷ்டை செய்திருக்கிறேன். எங்கள் சிவனைப் பிரதிஷ்டை செய்ய எங்களுக்கு ஏன் அதிகாரம் கிடையாது" என்று விடை கூறினாராம்.

***

உலகெலாம் புகழும் உத்தமராகவும் உலகத்தில் முதல் மனிதனாகவும் கருதப்படும் காந்தியடிகளுக்கும் இந்தக்கதியே. பிரம்மஞான சபையின் தலைவராக இருக்கும் ஆனிபெஸண்டு அம்மையாரை எத்தனையோ பிராமணர்கள் கர்ப்பூராத்தி எடுத்து வணங்குகிறார்கள். ஆயினும் ஆலயங்களில் கால் வைக்கத் தகுதி யில்லையாம். உலக வழக்கு இவ்வாறிருந்தும் நமது "ஹிந்து மெஸேஜ்" ஏட்டுச்சுரைக்காய் நியாயங்கூற முன் வந்தது நமக்கு வியப்பையே தருகின்றது.

***

மேனாட்டுக்கல்விப் பயிற்சியின் பயனாகவும் காந்தியடிகள், சுவாமி சிரத்தாநந்தர், பண்டித மதனமோகன மாளவியா முதலிய புண்யாத்மாக்களின் முயற்சியினாலும் பஞ்சமர்கள் அல்லது தாழ்த்தப்பட்ட ஜாதியார்கள் விழித்து விட்டனர். சுதந்தர ஜோதி அவர்கள் முன் தோன்றி விட்டது. அச்சோதியின் மகிமையை அவர்கள் ஒரு சிறிது உணர்ந்தும் விட்டனர். பன்னெடுங்காலம் மேல் ஜாதியாரின் அடிமைகளாக வாழ்ந்த அவ்வேழை மக்கள் தீவிரமான விசோமன வேட்கை பெற்று விட்டனர். சுதந்தர முழக்கமே எங்கும் கேட்கப் படுகின்றது. மதுரை வட்டகையிலுள்ள நாடார் சகோதரர்கள் ஆலயப்பிரவேசன விஷயமாகச் சிந்தனை செய்யத் தொடங்கி யிருப்பதாகத் தெரிகிறது. இந்திய சமூக வான மண்டலத்திலே இவ்வாறு கருமேகங்கள் பல தோன்றி நெருங்குவது கண்டும், பின் வருவனவற்றை ஊகித்தறியும் மனப்பான்மை யற்றவர்களாய் நம்மவர் வாழ்வது சரியாமோ? கோரமான சமுதாயப் புரளியால் விளையும் கேடுகளுக்கு பாரத நாட்டை உள்ளாக்காமலிருக்க இந்தியர்களாகிய நாம் விரும்பினால் பஞ்சமர்களுக்கு அவர்களின் பிறப்புரிமைகளை யெல்லாம் உடன் தானே அளிக்க நாம் மனவுறுதி பெறவேண்டும். வெகு காலமாக நிலை பெற்றிருக்கும் சமுதாயக் குறை பாடுகளை ஒரே அடியாக நீக்க முடியுமா வென்று சில பழமை விரும்பிகள் கேட்கக் கூடும், அன்னோர் ஜப்பான் சரிதையைக் கவனிப்பாராக!

இந்தியச் சட்டசபை மெம்பர் கனம் தங்கிய ஆர். கே. சண்முகம் செட்டியாரவர்களும் சென்னையில் பிரபல வர்த்தகராகிய ஸ்ரீமான் அய்யண்ணச் செட்டியாரவர்களும் இம்மாத ஆரம்பத்தில் இங்கிலாந்துக்குச் சென்றனர். ஸ்ரீமான் சண்முகம் செட்டியாரவர்கள் டாக்டர் ஆனிபெஸன்றம்மையாரின் 'நாஷனல் கன்வென்ஷன்' கோஷ்டியில் ஒருவராய்ச் செல்லுகின்றார். இங்கிலாந்தில் தமது தேசிய வேலை முடிந்த பிறகு ஜெர்மனி, பிரான்சு முதலிய நாடுகளுக்கும் செல்வாரென்று தெரிகிறது. ஸ்ரீமான் அய்யண்ணச் செட்டியாரவர்கள் வெம்பிலியில் நடைபெறும் பிரிட்டிஷ் சாம்ப்ராஜ்யப் பொருட்காட்சி சாலையைக் கண்ணுறவும், இங்கிலாந்திலே பெயர் பெற்ற வர்த்தக ஸ்தலங்களை நேரிற் பார்க்கவும் செல்லுகின்றார். இருவரும் தமது கருமங்கள் சித்திபெற்று சுகமாய்த் திரும்பி வந்து சேருமாறு இறைவன் அருள் புரிவாராக.

மதிப்புரை

ஆத்திச்சூடியின் அற்புத நாவல்:—இது தேவகோட்டை மு. சொ. சுந்தரேசன் செட்டியாரவாகள் எழுதிய ஒரு அருமையான நூல். ஆத்திச்சூடியின் ஒவ்வொரு சூத்திரத்துக்கும் ஒளவையார் வாக்கைத் தழுவி உலக நடையை அநுசரித்து அனேக சிறு சிறு கதைகளை சமயோசிதமாகச் சேர்த்து பதிக்கப் பெற்றது. தெளிவான தமிழ்நடை. எனினும் பல இடங்களில் ரகர றகரங்கள் பிழைபட வழங்கப் பட்டிருக்கின்றன. இக்குறைபாடு இரண்டாம் பதிப்பிலாவது நீக்கப்பெற்றால் நலம். மொத்தத்தில் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் முயர்சி பாராட்டத் தக்கதே விலை ரூ. **2**.

வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

குமரன்:—இப்பத்திரிகையின் மூன்றாவது சதங்கை முதல் மணி வரப்பெற்றோம். மூன்றாவது வருஷ ஆரம்ப முதல் குமரன் இரண்டு பத்தி கொண்ட ராயல் எட்டுப்பக்க அளவில் உருவத்தில் பெரியவனாய் வெளிவரத் தொடங்கியுள்ளான். வழக்கம்போலவே பல அருமையான விஷயங்களும் இச்சஞ்சிகையில் வெளிவந்துள்ளன. வருடச் சந்தா ரூ **3**.

வேண்டுவோர் காரைக்குடியில் ஆசிரியருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

பஞ்சாமிர்தம்:—இது, தமிழுலகத்திலே பெயர் பெற்ற ஆசிரியராகிய ஸ்ரீமான் அ. மாதவய்யரவர்களால் நடத்தப்பெறும் ஒரு மாதப் பத்திரிகை. ஆசிரியர் பெயரைக்கொண்டே பத்திரிகையின் சிறப்பு நன்கு விளங்குமாதலால் நாம் விரிவாக எழுதுதல் மிகையேயாகும். 80 பக்கம் கொண்ட சித்திரப் படங்களடங்கிய இப்பத்திரிகையின் வருஷசந்தா ரூ. **5**.

வேண்டுவோர் மைலாப்பூரில் பத்திரிகாசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விசேஷக் குறிப்புகள்

மாட்டு வயிற்றில் சிங்கம் பிறந்தது.

ஸ்ரீமாந் எஸ். ஆர். அர்த்தனரி செட்டி திராவிடனில் எழுதுகிறர்.

ஓமலூருக்கடுத்த மல்லகவுண்டனூரில் மாட்டின் வயிற்றில் சிங்கக்குட்டி பிறந்தது. பிறந்ததும் இறந்துவிட்டது. இதுவும் கலிகாலவிந்தையே !

ஜெர்மன் சக்ரவர்த்தியாயிருந்த கெய்சரின் மூத்த குமாரர் ஜெர்மனிக்குச் சக்ரவர்த்தியாக இருக்கவேண்டியவர் இப்பொழுது ஜெர்மனியில் விவசாயக்கருவிகளில் வியாபாரம் செய்து வருகிருராம்.

ஜிநோவாவிலுள்ள சர்வதேச சங்கக் காரியஸ்தலத்தில் பல தேசத்து ஆண்களும் பெண்களும் உத்தியோகம் செய்கிருர்கள் ; அவர்களுக்குள் கலப்பு விவாகங்கள் அதிகமாக நடந்துவருகின்றன. எனவே அந்தக் காரியஸ்தலம் சர்வதேச உலகமாக மாறி வருகிறதென்றும், சர்வதேச ஐக்கியத்திற்கு அது பெருந்துணையாகுமென்றும் சொல்லுகிருர்கள் ; இந்த தம்பதிகளுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் இவ்வாறே விவாகஞ் செய்தால் சர்வதேச ஐக்கியம் அதனுல் உறுதியாகுமாம்.

கொங்கு வேளாளர்களுக்குள் பெண்தூக்கல் என்ற வழக்கம் இன்றும் உண்டாம். கலியாண நாளில், மணமகனும் பிறரும் அறியச் சிலர் பெண்ணைத் தூக்கிக்கொண்டு ஓடுவதாம். அதனைத் தொடர்ந்து வேறு சிலர் ஓடுவதாம். பழங் காலத்து வழக்கங்களுள் ஒன்று இன்றும் ஒழியாம லிருக்கிறது.

இருபத்தைந்து வயதுள்ள குளோரியா என்ற அமெரிக்க நாடக மாதைக் கலியாணம் செய்ய விரும்பிப் பதினுயிரம் மாப்பிள்ளைகள் விண்ணப்பம் அனுப்பி யிருக்கிருர்களாம். குளோரியாவுக்கு இது குளோரியே.

தூங்கும் மனிதனை முகத்தில் தட்டி எழுப்புவதைவிடப் பெருவிரலைத் தொட்டால் சீக்கிரம் எழுந்திருப்பான் என்று வில்லியம் வால்ஷ் என்ற வைத்தியர் கூறுகிருர்.

வங்காளம் சம்பளப்பூரில் அபேதானந்தர் என்ற ஒரு சாமியார் ஜனங்கள் மாமிசம் சாப்பிடலாமென்று சொன்னதுடன் மாட்டு மாமிசமும் சாப்பிடலாமென்று உபதேசிக்கிருராம்,

வெடி மருந்து, பீரங்கி, விமானம் முதலிய சாதனங்கள் இல்லாமல் தூரத்திலிருந்தே எதிரிகளைக் கொல்லக் கூடிய தாமிகரே என்ற கருவியை கிரண்டல் மாத்யூஸ் என்ற நிபுணர் கண்டு பிடித்திருக்கிருராம். இந்தக் கருவியினுல் இனி யுத்தமே நடைபெருதென்றும் யுத்தம் நடப்பதாயின் எதிரிகள் இருவரும் ஏககாலத்தில் இறந்துவிடுவதால் போராட்டம் உடனே நின்று விடுமென்றும் கூறுகிருர்கள்.

"பி. வி. ராஜன்" பட்டணம் பொடி.

நிகரற்றது! புகழ்பெற்றது!! மணமிகுந்தது!!!

உயர்ந்த புகையிலையினால் தேர்ந்த வேலைக்காரரைக்கொண்டு குணமும் மணமும் காரமும் வாசனையும் நீண்டநாள் கெடாதது மான "பட்டணம் பொடி" தயார்செய்து இந்தியா, பர்மா, சிலோன் முதலிய பல ஊர்களுக்கும் விசேஷமாக அனுப்பிக் கொண்டு வருகிறோம். எமது பொடியை தருவிக்கும் வியாபாரிகளும் வாடிக்கைக்காரர்களும் பரிபூரணமான திருப்தியை அடைந்து தமது சந்தோஷத்தைத் தெரிவித்து வருகின்றனர். எங்கள் பொடியின் குணவிசேஷத்திற்காக அநேக பொருட்காட்சி சாலைகளிலிருந்தும் ஏனைய டாக்டர்கள் கனவான்களிட மிருந்தும் முதற் றரமான நற் சாக்ஷி பத்திரங்களும் பொன் மெடல்களும் வந்திருக்கின்றன. ஒரு தடவை ஆர்டர்செய்து தருவித்து உண்மை அரியலாம். ஒரு வீசை "120 தோலா" பொடி கிரயம் ரூ. 3—10—0. ரெயில் அல்லது வி.பி. தபால் செலவு பிரத்தியேகம், அரை வீசை கால் வீசை ஒருசேர் டின்களாகவும் அநுப்பப்படும்.

டாக்டர் B. S. மல்லய்யா, M. B. & C, M. அவர்களால் பரிசோ திக்கப்பட்டு சன்மானிக்கப் பெற்றதும் பல யோக்யதா பத்திரங்களும் மெடல்களும் பெற்றதுமான எமது பிரஸித்திபெற்ற

R. S. சுகந்த மூக்குத்தூள்

இது நூதனமாய் ஆயுர்வேத வைத்திய முறைப்படி தயாரிக்கப் பட்டது. இதனை உபயோகிப்பதனால் ஜலதோஷம்,பீனிசம்,மண்டை குத்தல், ஒற்றைத் தலைநோய், கண், மூளை, சமபந்தமான நோய்கள் யாவற்றையும் உடனே போக்கி ஆனந்தமான பரிமளத்துட னிருக் கக்கூடியது.

புட்டி 1-க்கு	விலை அணு ரூ.	0	4	0
ஒரு டஜன் பாட்டில்	விலை ரூ.	2	4	0
சாம்பில் பாட்டில் டஜன் 1-க்கு	ரூ.	0	10	0
ஒரு சேர் 24 தோலா டின் 1-க்கு	ரூ.	1	12	0

தபாற் செலவு அல்லது ரெயில் செலவு பிரத்தியேகம்.

சிரேஷ்டமான ராஜன்ஸ் பரிமள வாசனை புகையிலை

வீசை 1-க்கு விலை ரூ. 1 12 0

சிறிய டின் டஜன் 1-க்கு ரூ. 1 14 C

மற்ற விவரங்களுக்கு கேட்லாக்கு தருவித்து பார்க்கவும்.

பி. வி. ராஜன் & கம்பெனி,

நெ. 44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி,

மதராஸ்.

ஏன் எங்களுடைய ரவுண்ட் ரேடியம்
கெடியாரங்களை உபயோகிக்கக்கூடாது.

இன்றைக்கே ஒன்று எழுதி வரவழைத்து உபயோகித்துப் பாருங்கள்.



இக்கெடியாரம் மிகவும் உறுதியான சாமான்களால் தயார் செய்யப்பட்டு புதிதாய் வந்திருக்கிறது. இதில் யாரானபோதிலும் வெகு சுலபமாக சீக்கிரத்தில் மணியை தெரிந்து கொள்ளக்கூடும். இதைக் கையில் கட்டிக் கொண்டு எப்பேர்ப்பட்ட கஷ்டமான வேலை செய்தபோதிலும் கடியாரம் கெடாது.

கையில் கட்டிக்கொள்ளும் சங்கிலியுடன்	ரூ. 7 0 0
,, ,, தோல்பட்டையுடன்	ரூ. 6 8 0

புதுமாதிரி! முந்துங்கள்!!

எலெக்டிரிக் சிகார்லைட் விளக்கு.

இது எலெக்டிரிக் சக்தியினால் எரியும். நெருப்பு தேவையானால் விளக்கின் டைரெக்ஷன் படி செய்துமேல் புறத்தில் அமைத்திருக்கும் சக்கரத்தைத் திருப்பினால் திக்கென்று பளபளப்பான பிரகாசத்துடன் எரியும். பின்புறம் மூடிப் பக்கத்தில் மறையைக் கழற்றிவிட்டு பெட்ரோல் எண்ணெய் போடவேண்டியது. லைட் 1-க்கு ரூ. 1—4—0. லைட் 3-க்கு ரூ. 3—0—0. மேற்படி விளக்கு போடும் சல் டஜன் 1-க்கு ரூ. 1—8—0 தபால் செலவு வேறு.

விலாசம் :—

பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27, மதராஸ்.

படிக்கப் படிக்க இனிக்கும்! நினைக்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சாஸ்திரம்

பிரசித்தி பெற்ற இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், இல்வுலகில் அனுபவிக்கவேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. விவாகமானவர்க்கும் இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது. 50 படங்களுடன் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1, தபால் செலவு அணா 7.

மாணிக்க விலாசம் பிரஸ்,

அருணாசல முதலி வீதி,

சவுகார்பேட்டை, மதராஸ்.

அகஸ்தியர்
பரிமள கேசரி தைலம்.

இத் தைலத்தை உபயோகித்து வருவதால் தலையில் எரிச்சல், தலை மயிர்கள் உதிர்கிறது, தலை மயிர்களின் பிளப்பு, தலை மயிர்கள் சிகப்பு நிறமாகிறது, நாசியில் ரத்தம் வடிதல், தலையில் சுண்டுகள் எற்படுதல், தலையில் எற்படும் விஷத்தினால் சிரங்குகள் உண்டாகுதல், கண்கள் சிகப்பாகுதல், கண்களில் ஜலம் வடிதல் இன்னும் தலையில் எற்படும் சகல வித மான வியாதிகளையும் நீக்கிச் சுகம் தரும். விலை புட்டி 1-க்கு ரூபா 1. V. P. அல்லது C. O. D. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

துரைசாமி அண்டு கம்பெனி,
58, பெரியண்ண முதலி தெரு,
மிண்டு போஸ்டு, மதறாஸ்

ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட் டிருக்கிறது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

	ரூ.	அ.	ப.
ஆறு காண்டம் ஒரே செட்டு பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை	15	0	0
சுந்தரகாண்டம் பாராயணத்துக்கு	2	4	0

இன்னும் இதர தமிழ்ப் புஸ்தகங்களும் கிடைக்கும்.

காந்தன் & ராஜன்,
புஸ்தக வியாபாரிகள்,
மைலாப்பூர், சென்னை.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிட வேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

வெஸ்ட் அண்டு கோ,

மவுண்ட் ரோடு,

சென்னை.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிஷ்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா ஒன்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0.

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷ்தசாலை, எழும்பூர், மதராஸ்.

ஜெர்மன் சில்வர் டம்ளர்



மூடியுள்ளது. மூடியைத் தனியாய் கழற்றக் கூடியது. உயரம் 7 இஞ்சு. விலை 1-க்கு ரூ. 2.

ஜெர்மன் சில்வர் பொம்மைகள்

யானை, குதிரை, மான், சிங்கம் முதலிய மிருகங்கள்.
2½, 3 இஞ்சி உயரம்.
விலை 1-க்கு ரூ. 1-4-0.
ஒரு செட் 6 பொம்மைகளுக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு
விலை ரூ. 6-8-0.

அன்னபூர்ண சில்க் ஸ்டோர்ஸ்,
தசாசுவமேத ரோட், காசி.

ஞான திருஷ்டி

இவ்வருமையான புத்தகத்தைப் படிப்பதால் இறந்தவர்களுடன் சம்பாஷணை புரியலாம், காணாமல் போனதைக் கண்டெடுக்கலாம், இருக்குமிடமிருந்தே தூரதேசங்களைப் பார்க்கலாம், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறியலாம். புத்தகத்தில் கண்டிருக்கும் "ஞான திருஷ்டிக் கண்ணாடி" யென்னும் உபாயக் கருவியுடன் இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம்

மெஸ்மெரிஸ் கல்விச்சாலை,
சௌகார்பேட்டை, மதராஸ்

ஜெர்மன் வைரக் கம்மல்.



அசல் வைரத்தையும் தோற்கடிக்கும் 7-கமலங்களுடனும் (Dimond-Extra) சவரன் பொன்னுக்குச் சமமான ஒருநாளும் கறுக்காத கனடியன் பொன்னால் மிகவும் இலக்ஷணமாயும் உறுதியாயும் செய்யப்பட்டவை. ஸ்திரீகள் அணிந்துகொள்ளும் பெரிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 4. ஆண் பிள்ளைகளுக்குக் கடுக்கனாயும், சிறு பெண்களுக்கு கம்மலாயும் உபயோகிக்கக்கூடிய சிறிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 3. தபால் கூலி வேறு.

அலிவர் அண்டு கம்பெனி, 22.வது பீட், மதராஸ்.

ஜீ. பாம்பே குஷ்டாம்ருதம்.

முந்துங்கள் ! முந்துங்கள் !! முந்துங்கள் !!!

சொற்ப மருந்தே கையிருப்பு.

இந்த குஷ்டாம்ருத சஞ்சீவியை வியாதியின் வன்மைக் கேற்ற வாறு ஒரு மண்டலம் அரை மண்டலம் அல்லது 16 நாள் உட் கொண்டு வந்தால் 18 வித குஷ்டரோகங்களும் 21 விதமான மேக ரோகங்களும் மேக சம்மந்தத்தால் வரும் பவித்திரம், கிரந்திகள் ஆருத பெருத்த விரணம் குழிப்புண்கள் இரத்தக்கெடுதியால் வரும் சர்மவியாதிகளும் லிங்கப்புற்று கண்டமாலை முதலிய கொடிய ரோகங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி திரேகத்தை வயி ரம் போல் செய்யுமென்பதற்கு இதற்கு குறிப்பிட்டு இருக்கும் விலையே அதில் விசேஷ குண முடைய சஞ்சீவிகள் சேர்க்கப்பட் டிருக்கின்றன என்பதற்கு போதுமான அத்தாக்ஷி. இது ஒப்புயர் வில்லாத சஞ்சீவி. இதை கண்ணுற்றும் விட்டு விடுவது வீணைப் பயனாகும், அவுஷதம் உட்கொள்ளும் விபரமும் அனுமானமும் மருந் துடன் அனுப்பப்படும்.

16 நாள் மருந்து புட்டி 1க்கு ரூ. **11-4-0.**

தபால் செலவு பிரத்தியேகம்.

ஆயுர் வேத பண்டிட், **ஜீ. பாம்பே அண்டு கோ.,**

சாமிநாய்க்கன் வீதி, சிந்தாதிரிபேட்டை, சென்னை.

ஓர் உயர்தர தமிழ் ஸஞ்சிகை.

"கிராம வாழ்க்கை"

மாதம் இருமுறை வெளியாகிறது. வருட சந்தா ரூ. 4.

சென்னை ராஜதானி கிராமவாசிகள் உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், கிராமங்களின் முன்னேற்றத்தையும் கருதி இப்பத்திரிகை பிரசுரமாகிறது.

கௌரவ பத்திராதிபர் :—

ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார்,

M.L.C. *Bar-at-Law.*

சென்னை இராஜதானி முழுவது முள்ள கிராமங்களில் இப்பத்திரி கை விசேஷமாகப் படிக்கப்பட்டு வருவதினால் வியாபாரிகளின் விளம் பரங்களுக்கு இதுவே நிகரற்ற கருவியாகும்.

மாதிரிப் பிரதி இனாம்.

மானேஜர்—" கிராமவாழ்க்கை "

331, மிண்ட் தெருவு, மதராஸ்.

புத்திர சந்தான எண்ணெய்

ஸ்திரீகளின் கர்ப்பஸ்தானத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்

போது வித்தைப் புசித்து வருவதினாலும் மற்றும் பல காரணத்தினாலும் கர்ப்பஸ்தானத்தில் சதை வளர்ந்து சொரிபற்றி இரத்தங் கட்டியிருந்தாலும் மூலச் சுழியில் வாய்வு பித்தம் தங்கினாலும் கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் கர்ப்பஸ்தானத்திலிருக்கும் ஆறுவித குற்றங்களையும் நீக்கி சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு கருதரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்து போவது முண்டு. இப்பேர்க்கொத்த கெர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும். புட்டி 1-க்கு ரூ.2.

விலாசம் :— கேட்லாக் இனாம்.

என். வி. கோபால் அண்டு கோ.,
27, வெங்கடேசமேஸ்திரி தெரு,
கிருஷ்ணாங்குளம், மதராஸ்.

பொய்யா? — — மெய்யா?

என்பதை ஒருமுறை கவனியுங்கள்.

தாங்கள் ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால் ஒப்புயர்வில்லாத மேலான ஒன்றும் சிறந்த குணம், மணம் நிறைந்ததென்றும் தந்த நோய்களை நீக்குவதில் சஞ்சீவிக்கொப்பானதென்றும் நாவரட்சி முதலான எவ்வித கெட்ட குணமுமில்லாததென்றும் மனோரம்மியத்துடன் புகழக்கூடியதாகவும் வெற்றிலை பாக்குடன் உபயோகிக்கத் தக்கதாகவு முள்ள பாலக்காடு வாசனைப் புகையிலையென்று ஓர் அருமையான வாசனைப் புகையிலை கீழேகண்ட விலாசதாராகிய நம்மிடம் விற்கப்படுகிறது. ஷை புகையிலையை சென்னை ராஜதானி, பாம்பை, கல்கத்தா, ரங்கூன் முதலிய பலான இடங்களுக்கும் வி. பி. (V. P.) மூலம் ஏராளமாக அனுப்பப்படுகிறது. ஒருமுறை உபயோகித்துப் பார்ப்பீர்களானால் மெய்யென்று நம்புவீர்கள் என்பது உறுதி.

$\frac{1}{4}$ (கால்) பவுண்டு அடங்கிய டின் 1-க்கு விலை அணா 7, வி. பி. (V. P.) செலவு பிரத்தியேகம். வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கலாம்.

யஸ். ஆர். பிள்ளை, புரோப்ரைட்டர்,
கலியாணி பிரஸ், திருநெல்வேலி ஜங்ஷன்

சமசார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

பீஜ்பந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறாமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் தரப்பியாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா **1**-க்கு ரூ. **2** வி. பி. சார்ஜ் வேறு, சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,

நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதுராஸ்.



"Collapsible" Key Ring.

A Key Ring that does not buldge the pocket.

PRICE 0-3-0 each.

Rs. 2-0-0 per doz.

K. S. MUTHIAH & Co., Tinnevelly.

தமிழ் புத்தகங்கள்.

	ரூ.	அ.	ப.
காந்தாமணி	0	8	0
மதிமுகி	0	8	0
நவராத்திரி பிரசங்கங்கள்	0	5	0
திக்கற்ற இருகுழந்தைகள்	1	8	0
தனபாக்கியம்	2	0	0
சுயம்பிரகாசம்	0	8	0
தமிழ் வியாசம்	0	5	0
காதர் அலி	0	0	6
நான்கு பாடகர்கள்	0	2	0
கற்பகவல்லி	0	8	0
வஸந்த சமுத்திரம்	0	12	0
புஷ்பவனம்	0	14	0
குணசுந்தரன்	0	12	0
பங்கஜவல்லி	0	8	0
பரிமளரோஜா	0	6	0
பாதாள புவனராணி	0	8	0
நீலக்சொடி	0	5	0
கமலாக்ஷி	1	12	0
ஆநந்தரங்கன்	0	10	0
பொன்னுசாமிதேவர் கொலை	0	14	0
தஞ்சைநாயகர் தாழ்வு	1	0	0
மங்கையர் பகட்டு	0	12	0
தக்காணத்துப் பூர்வகதைகள்	1	4	0
கீர்த்தி சிங்கன்	0	8	0
இரத்தினபுரி ரகசியம்	2	4	0
நெப்போலியன்	1	8	0
காட்டு ராஜன்	0	3	0
இரகுநாதன்	0	12	0

தமிழ் புத்தகங்கள்

	ரூ.	அ.	ப
ஆனந்தமடம்	1	0	0
கருங்குயில் குன்றத்துக்கொலை	1	6	0
தேடாத செல்வம்	0	4	0
ஜோஸப் மாஜினி	0	12	0
ஸ்வாமி விவேகானந்தர் அருளிச்செய்த எதிரொலிகள் ...	0	8	0
விவேகானந்த ஸ்வாமிகளின் ஞானத்திரட்டு ...	1	0	0
சிவராத்திரி மான்மியம்	0	5	0
வேதாந்த சூளாமணி	0	2	0
முகம்மது அலி சரித்திரம்	0	8	0
மதுரை மீனுக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்	0	3	0
அற்புத ராமாயணம்	0	10	0
மனோன்மணி கதை	0	8	0
வாக்குண்டாம் மூலமும் உரையும்	0	1	3
பாரதநீதி	0	2	0
சௌந்தரிய லகரி மூலமும் உரையும்	0	6	0
அகம்புற ஆராய்ச்சி விளக்கம்	1	4	0
தேவாரத்திரட்டு ஆறுமுக நாவலரவர்களது ...	2	0	0
அரிச்சந்திர புராணவசனம்	1	8	0
பகவற்கீதை மூலமும் உரையும்	2	0	0
சாதா வேஸ்கதை	1	0	0
56. ஸங்கீத ரத்னுவளி	3	0	0
ஸ்ரீ கருடபுராண வசனம்	0	6	0
தசாவதார பிரபாவம்	1	0	0
ஸ்ரீமதி	0	12	0
முகியித்தீன்மாலை	0	10	0
முகியித்தீன் ஆண்டகை சத்துரு சங்காரம் ...	1	0	0
மகாத்மா காந்தி இந்திய சுயராஜ்யம்	0	6	0
சத்தியாக்கிரகம்	0	6	0
பழமொழி நீதிக்கதைகள்	0	8	0

தமிழ் புத்தகங்கள்

	ரூ.	அ.	ப.
அரிச்சந்திர நாடகம்	2	0	0
ஸ்வராஜ்யம்	0	8	0
அருணாசல புராணம் ஆறுமுக நாவலரவர்களது ...	1	0	0
மதனகல்யாணி (மூன்று பாகம்)	4	8	0
ஆநந்த கதாகல்பகம்	3	0	0
நந்தனார் கீர்த்தனை	0	12	0
குமரேச சதகம்	0	2	0
முத்துசாமிக் கவிராயரவர்களின் பக்திரஸக் கீர்த்தனை ...	0	4	0
மீனலோசனி	0	6	0

மானேஜர்:

'லக்ஷ்மி' ஆபீஸ்,

தபாற் பெட்டி 99,

சென்னை.

RING WORM

சர்வபடை சங்காரி.

இது எவ்வளவு நாள் பட்டதாகிலுமுள்ள படை, சொறி, சிரங்கு இவைகளை 24 மணி நேரத்தில் குணப்படுத்தும். உத்திரவாதம்.

விலை புட்டி 1-க்கு அணா 10. தபால் சிலவு வேறு.

துருவா அண்டு கோ.,

மதராஸ்.

ரப்பர் ஸ்டாம்பு செட்டுடன் ரூபா 2.



பித்தளை அரக்கு சீல் ரூபா 1.

ரப்பர் முத்திரை அரக்கு சீல், பிளாக்குகள் செய்ய தகுதியான இடம்

டி. ஜி. சுந்தரம் அண்டு கோ.,

223, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதராஸ்.

கேட்லாக்கு எழுதி கேழ்க்கவும்.

அமிர்தாஞ்சன்

நோய்களைப் போக்கவல்ல சிறந்த சாதனம்

1924 காலண்டர் 1924

மூன்று நிறங்கள் கொண்ட ஆப்டோன்

மகாத்மா
காந்தி படம்

தபாற் செலவு உள்பட தனிப்பிரதி அணா 6.

மொத்த வர்த்தகர்களுக்கு 25 பிரதி ரூ. 4 8 0

,, 100 ,, ,, 15 0 0

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை : :

210338

ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்து விடாதீர்கள்.

ஷர்ட்டு 1-க்கு ரூ. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட் ரூ. 2-8, 2-12, 3, 3-8.

பார்சி சேலே (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். வயலெட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44" ரூ. 6, 6-8. 8 கெஜம் 44" ரூ. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44" ... ... ரூ. 7, 8.

வெள்ளைச் சேலே.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரூ. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரூ. 6, 7-8.

கோகர் ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரூ. 6-8, 7, 8, 10.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபால் பெட்டி 99, - - மதராஸ்.

நம்பிக்கையுள்ள

வர்த்தகஸ்தலம்.

கம்பெனி

ஸ்தாபித்த வருஷம் 1900.

கராச்சி பட்டுப்

புடவைகள்.

தற்கால நாகரீகத்திர்க்கேற்றது. அழகான சரிகைக்கரைகள், சகல விதமான கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1, 18 மு புடவை 1க்கு ரூ. **55.**
நெ. 2, „ „ ரூ. **45.**

கராச்சி ரவிக்கை 1க்கு ரூ. 3-8.

பெரிய கேட்லாக் இனாம்.

கே. எஸ். மூத்தையா கோ.

சில்க் அவுஸ், காசி.

பிராஞ்சுகள் : சென்னை, திருநெல்வேலி.

Printed by M.A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.